Registered at the G. P. O. as a Newspaper

வாரப் பதிப்புவிலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

'சின்வா'

பாதரக்ஷைகளில் பிரபல்யமிகுந்த பெயர்




இலங்கை பூராவிலும் கிடைக்கும்
இதையே வற்புறுத்தி பாவியுங்கள்

சின்வா

சின்வா

பாதரக்ஷைகளில்
சிறந்தது

72, 1-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆனி திங்கள் 14-ம் நாள் 28—6—1959 ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் பிறை 20 இதழ் 4

# "நாட்டைக் காப்பதா, மூட்டை சுமப்பதா? எது எங்கள் கடமை?"

## இராணுவத்தினரிடையே கிளம்பியுள்ள சலசலப்பு

### வெளியேறிய அமைச்சர் ஒருவர் தூண்டிவிடுவதாகச் சந்தேகம்

(சுதந்திரன் நிருபர்)

"விரோதிகளிடமிருந்தும், குழப்பக்காரர்களிடமிருந்தும் நாட்டையும், நாட்டு மக்களையும் எங்கள் உயிரைப் பலியிட்டேனும் பாது காப்பதுதான் எங்கள் கடமை. முதுகைக் கொடுத்து மூட்டை சுமந்து இடுப்பு முறிவது எங்கள் கடமை அல்ல. இந்தக் கட்டாய வேலைக்கு ஒற்றுமையாக ஒரு முற்றுக் காண வேண்டும்"

மேற்கண்டவாறு ஒரு சலசலப்பு கொழும்புத் துறைமுகத் துக்குள்ளே துறைமுக வேலைக்கு அழைக்கப் பட்டுள்ள இராணுவ வீரர்களிடையே தோன்றியிருப்பதாகவும், இந்த ஆபத்தான எழுச்சி வலுப் பெற்றால் அது இராணுவக் கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்குக்கும் குந்தகம் விளைவிப்பதாக இருக்கும் என்றும் ஒரு உயர்தர இராணுவ அதிகாரி அரசாங்கத்தை எச்சரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த சில வாரங்களாக கொழும்புத் துறைமுகத்தினுள்ளே ஏற்பட்டுவந்தபகுதி பகுதியான வேலை நிறுத்தங்களைத் தொடர்ந்து புதன் கிழமை பிற்பகல் பரிபூரண வேலை நிறுத்தம் ஏற்பட்டது. சமசமாஜிஸ்ட்டுகள், கொம்யூனிஸ்டுகள், பிலிப் கட்சியினர் யாவரும் ஒரு முகமாக வேலை நிறுத்தம் செய்ததால் சகல வேலைகளும் ஸ்தம்பித்தன.

#### அதிருப்தி

உறங்கிக் கிடந்த துறைமுகத்துக்கு உயிர் ஊட்டுவதற்கு வியாழக்கிழமை இராணுவம் அழைக்கப்பட்டது. இராணுவ வீரர்கள் மூட்டை சுமக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். கஷ்டசாத்தியமான வேலைகள் பலவற்றைச் செய்யும்படியும், ஓய்வு ஒழிச்சல் இன்றி இரவு பகலாக காரியமாற்றும்படியும் அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டதால் ஒரு வித அதிருப்தியும், எதிர்ப்பு மனப்பான்மையும் இராணுவத்தினரிடையே வளர்ந்துள்ளனவென்று சொல்லப்படுகிறது. நாட்டைக் காப்பதுதான் தங்கள் கடமையேயன்றி மூட்டை சுமப்பதல்ல என்று அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனராம்.

#### மூட்டை சுமக்கமுடியாது

"சென்ற ஆண்டு நடைபெற்ற வகுப்புக் கலவரங்களின் போது நாங்கள் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் பணியில் முழுமனதுடன் ஈடுபட்டோம். எங்களில் பலர் இன்னல்கள் அடைந்தார்கள்; உயிரிழந்தார்கள். நாங்கள் வருந்தவில்லை. எங்கள் கடமையென்று மகிழ்ந்திருந்தோம். மூட்டை சுமக்கும் வேலையை நாம் அப்படி மகிழ்ச்சியோடு செய்ய முடியாது.

#### நாளெல்லாம் வேலை நிறுத்தம்!

"உணவின்றி மக்கள் வாடுகிறார்கள் என்றால் ஒரு நாள் அரை நாள் அரிசி மூட்டையை இறக்கியேனும் தொண்டு புரிவது எங்கள் கடமை. அப்படியான சந்தர்ப்பத்தில் மனிதத் தன்மையோடு காரியமாற்ற நாங்கள் தயங்கமாட்டோம்.

"வருடம் 365 நாளும் வேலை நிறுத்தம் என்றால் நாங்கள்தான் முறியவேண்டுமா? அப்படியென்றால் நாங்கள் ஏன் இராணுவத்தில் சேர்ந்து எத்தனையோ கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக வேண்டும்? துறைமுகத் தொழிலாளராகச் சேர்ந்து அதிக சுதந்திரமும் அதிக சம்பளமும் பெற்றிருக்கலாமே."

மேற்கண்டவாறு துறைமுகத்துள் மூட்டை சுமக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

# முதலிக் குளப் பிரதேசம் பாது காக்கப்பட்டது!

## 450 தமிழ்க் குடும்பங்கள்: தமிழரசுக் கட்சியின் அரிய சாதனை

### காணி பெறுதவர்களுக்கு ஜூலை 7-ல் மீண்டும் காணிக் கச்சேரி

(சுதந்திரன் திருமலை நிருபர்)

மே மாதம் நடைபெற்ற காணிக் கச்சேரிக்கு சமுகம் கொடுக்க முடியாது போன காரணத்தினால் முதலிக் குளக் (மொரவேவா) குடியேற்றத்திட்டத்தில் நிலம் பெற முடியாது போனவர்களுக்குத் திரும்பவும் ஒரு காணிக் கச்சேரி வைத்து நிலம் வழங்க ஏற்பாடாகியிருக்கிறது.

முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் நிலம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு மே மாதம் 4ந் தேதி காணிக் கச்சேரி வைக்கப்பட்டது. விண்ணப்பதாரர்களில் ஒரு சிலர் தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்தக் காணிக் கச்சேரிக்கு ஆஜராகத் தவறிவிட்டார்கள்.

இவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென கோப்பாய்ப் பிரதிநிதியும் தமிழரசுத் தலைவருமான திரு கு வன்னியசிங்கம் காணி அமைச்சருடனும், மாகாண அதிபருடனும் வாதாடியதன பயனாக எதிர்வரும் ஜூலை மாதம் 7ந் தேதி திரும்பவும் ஒரு காணிக் கச்சேரி வைக்க ஏற்பாடாகியிருக்கிறது.

#### ஜூலை 7

சென்ற முறை காணி பெறத் தவறியவர்கள் யாவரும் உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட பத்திரங்களைப் பூர்த்தி செய்துகொண்டு திருகோணமலைக் கச்சேரியில் மேற்குறிப்பிட்ட ஜூலை 7ந் தேதி காலையில் சமுகமளிக்க வேண்டும் என்று திருமலைத் தமிழரசுக் கட்சிக் கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

# இ. போ. ச. பஸ்களுக்கு புதிய தொடர் இலக்கம்?

## இபோச 1, இபோச 2, இபோச 3.... என்று பொறித்து பிரச்னையை தீர்க்க ஆலோசனை

பஸ் வண்டிகளில் சிறி பொறிக்கும் பிரச்னையை தீர்ப்பதற்கு அரசாங்கம் ஒரு புதிய வழியை ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. இதன்பிரகாரம் இ. போ. ச. வைச் சேர்ந்த சகல வண்டிகளுக்கும் ஒரு புதிய தொடர் இலக்கத்தைப் புகுத்தி CTB 1, CTB 2, CTB 3... என்று இலக்கம் பொறிக்கப் படலாம் எனப் போக்குவரத்து அமைச்சர் காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு உயர்தர அதிகாரி சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

மேற்படி ஆலோசனையை முதன்முதல் வெளியிட்டவர் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தான். கடந்த வாரம் அவர் சிறிப் பிரச்னை சம்பந்தமாகப் பிர


(5-ம் பக்கம் பார்க்க)

## இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெலட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!



● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சம நிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராணி

நாடகம் — எழுதியவர்: "அன்புமணி"

வேற்று நாட்டு மன்னனை காளிங்கனுக்கு ஒற்றறிய விஜயபுரிக்கு வந்த ஆரணங்கு வேதவல்லி கைதாகிச் சிறை வைக்கப்பட்டு விடுகிறாள். விஜயபுரி மன்னன் விக்கிரமனோ வேதவல்லியின் அழகில் மயங்கி அவளைத் தன் ராணியாக்கிக் கொள்ள விழைகிறான். பட்டத்துக்கு ராணி ஒருவள் இருக்க வேவு அறிய வந்தவளை வேறு அணைத்துக் கொள்வதா என்று மந்திரி வீரசேனர் வாதாடுகிறார். தளபதியின் அபிப்பிராயத்தையும் மன்னர் அறிய வேண்டுமென்று கூறுகிறார்.—கடந்த வாரம் வெளிவந்த பகுதியின் சாரம் இது. இனித் தொடர்ந்து படியுங்கள்.

(மன்னர் அழைப்பு மணியை அடிக்கிறார். ஒரு சிப்பாய் வருகிறான்)

மன்: தளபதி வேங்கைநாதனை சீக்கிரம் அழைத்து வா!

(சிறிது நேரத்தில் தளபதி வருகிறார்)

மன்னன்: தளபதியாரே! வேதவல்லியை நான் திருமணம் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். உம்முடைய அபிப்பிராயம் என்ன?

தளபதி: (திகைத்து) என்ன? ...என்ன சொல்லுகிறீர்கள் மன்னவா? வேதவல்லி நமது பகைவரின் கையாள். விஷத்தை விரும்பிக் குடிப்பதுபோலல்லவா இருக்கிறது உங்கள் பேச்சு!

மன்: உமது அபிப்பிராயத்தை மட்டுமே கேட்டேன். வீண்பேச்சு வேண்டாம்!

தள: நீங்கள் வேதவல்லியை மணந்துகொள்வதானால் நான் இப்பொழுதே என் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன். இதோ! (உடைவாளைக் கழற்றித் தருகிறான்)

மன்: நிறுத்தும்! நீங்கள் எல்லோரும் சேர்ந்து சதி செய்து என் இன்ப வாழ்வைக் குலைக்கப் பார்க்கிறீர்கள்?

வீர: மன்னவா! உங்கள் நலத்துக்காகவே எங்கள் வாழ்க்கை அர்ப்பணிக்கப் பட்டிருக்கிறது. அதனால் தான் எங்கள் விருப்பத்துக்கு மாறாக உங்களுக்கு மனக் கஷ்டத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

தள: அது மட்டுமில்லை அரசே! நிலைமையை நீங்களும் சற்றுத் தெளிவாகச் சிந்தித்துப் பாருங்கள். இந்தத் திருமணத்தினால் ஏற்படக் கூடிய விளைவுகளை எண்ணிப் பாருங்கள்.

வீர: இதை அறிந்தால் உங்களையே தெய்வமெனப் போற்றும் மகாராணியார் எவ்வளவு மனம் வருந்துவார்! வெளிநாட்டவர்கள் இதை அறிந்தால் நம் செங்கோலைப்பற்றி என்ன நினைப்பார்கள்?

தள: அது மட்டுமல்ல அரசே, விஷநாகத்தை வீட்டில் வைத்துக்கொண்டால் அதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களைக் கற்பனை செய்து பாருங்கள். மாற்றானின் சூழ்ச்சியில் நாம் மயங்கலாமா?

மன்: போதும்! நான் அவளைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால் இன்றிலிருந்து அவள் சிறையிலிருக்கக்கூடாது. அந்தப்புரத்தில் மகாராணிக்குரிய சகல சௌகரியங்களுடனும் இருக்க வேண்டும். இதற்கு மேலும் என்னை வற்புறுத்தாதீர்கள்,

(மன்னர் போகத் திரும்புகிறார். அதற்குள்—"நில்லுங்கள்!" என்று குரல் கேட்கிறது. மகாராணி பிரவேசிக்கிறார்)

மகா: என்னுடைய அந்தப்புரத்தில் இன்னொருத்தியை நான் அனுமதிக்க முடியாது.

மன்: மகாராணியாரே! இது என் சொந்த விஷயம்.

மகா: அதில் எனக்கும் பங்குண்டு.

மன்: என்ன உளறுகிறாய்?

மகா: நான் உங்கள் மனைவி என்பதை ஞாபகமூட்டினேன்.

மன்: அதைத்தான் நானும் சொல்கிறேன். நீ என் மனைவி! கணவன் சொற்படி நடப்பதுதானே மனைவியின் கடமை!

மகா: அதுமட்டுமல்ல. கணவன் தவறான வழியில் செல்லும்பொழுது தவறை உணர்த்தி நல்வழிக்குத் திருப்புவதும் மனைவியின் கடமை.

மன்: தவறான வழி? நான் செய்யும் தவறு என்ன என்பதைச் சொல்ல முடியுமா?

மகா: இந்த நாட்டுக்கு அபகீர்த்தி தேடுவது தவறு. மக்களின் அதிருப்தியைச் சம்பாதிப்பது தவறு. நாட்டுக்கு ஆபத்தைத் தேடுவது தவறு. பகைவனின் ஒற்றருக்கு அரண்மனையில் இடமளிப்பது தவறு. போதுமா?

மன்: இது என்னுடைய நாடு, நான் இந்த நாட்டின் மன்னன். என் இஷ்டப்படி நான் நடப்பேன். நீ யார் கேட்பதற்கு?

மகா: நான் இந்த நாட்டின் மகாராணி!

மன்: ஆ!

மகா: ஆமாம், இந்த நாட்டின் நலத்திலும், இந்த நாட்டு மக்கள் நலத்திலும் சமபங்குகொண்ட மகாராணி நான்!

(மன்னன் மனம் மாறுகிறது. நிலை தடுமாறிச் சாய்கிறார். எல்லோரும் பரபரப்படைந்து மன்னனைக் காப்பாற்ற முயற்சிக்கிறார்கள். சிறிது நேரத்தில் மன்னர் பேசும் சக்தி பெற்றுவிடுகிறார்.)

மன்: மந்திரியாரே! தளபதியாரே! வேதவல்லியை விடுதலை செய்ய வேண்டாம். அவள் ஆயுள் கைதியாகவே இருக்கட்டும். இனி நீங்கள் போகலாம்.

(வீரசேனரும் வேங்கைநாதனும் வெளியேறுகின்றனர்)

மகா: பிரபு! (மன்னன் மார்பில் சாய்கிறாள். மன்னர் ஆதுரத்துடன் அவளை அணைத்துக்கொள்ளுகிறார்)

—(முற்றும்)

## அகில இலங்கைத் தமிழ்ச் சங்கம்

அகில இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் 4-வது ஆண்டு மகாசபைக்கூட்டம் கடந்த 13-6-59ல் பம்பலப்பிட்டியில் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் தலைமையில் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமானது.

அத்தருணம் பின்வருவோரைக்கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது:-

போஷகர்: பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தலைவர்: வித்துவான் வ. மு. கனகசுந்தரம், உபதலைவர்கள்: வித்துவான் முருகேசு, சைவப்புலவர் வ. செல்லையா, காரியதரிசி: ஆசிரியர் திரு சி. சின்னத்தம்பி, உபகாரியதரிசி: திரு க. சிவபாதம், தனாதிகாரி: திரு வே. தம்பு, உபதனாதிகாரி: திரு இ. குமாரசுந்தரம், நிருவாகசபை அங்கத்தவர்கள்: திரு சங்கரவைத்தியலிங்கம், திரு சி. கனகையா (ஆசிரியர்) திரு வி. சிவகுருநாதன் (ஆசிரியர்) திரு மூ. நவரத்தினம் (ஆசிரியர்)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, பிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


# "செயலாளரின் சூழ்ச்சி காரணமாகவே கூட்டம் குழம்பிக் குழம்பி நடைபெற்றது"

## அரசினர் தமிழர் ஆசிரியர் சங்க விவகாரத்தில் விளக்கம்

"தமிழர் ஆசிரியர் சங்கத்தில் கோஷ்டிச் சண்டை" என்ற தலைப்புடன் 14-6-59 சுதந்திரனில் வெளியிடப்பட்டிருந்த செய்தியைக் கவனித்தேன். உண்மைக்கு மாறானவையும் தப்பபிப்பிராயத்தை உண்டாக்கக் கூடியவையுமான விஷயங்கள் அச்செய்தியில் காணப்பட்டமையால் உண்மையை விளக்க இக்கடிதத்தை வரைகிறேன்.

### நான் கோஷ்டித் தலைவனல்லன்

"சொந்தக் காரணங்கட்காக, பொதுச் செயலாளர்மீது கொண்ட கோபத்தை இப்படிச் சாதிக்க முயலும் கோஷ்டியை வழிநடத்தியவர் திரு ஏ. கே. சுப்பிரமணியம் என்று சொன்னார்கள்" என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எந்தக் கோஷ்டிக்கும் நான் தலைமைவகிக்கவில்லை என்பதையும் எவரும் பொதுச் செயலாளர் மீது சொந்தக் கோபத்தைச் சாதிக்க முயலவில்லை என்பதையும் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

### சுதந்திரன் செய்தி

மேலும் அச்செய்தியில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:-

(அ) புதிதாகத் தெரிவு செய்யப்படும் கமிட்டி வரவு செலவறிக்கைகளைப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கும் என்ற நிபந்தனையுடன் அறிக்கைகள் தற்காலிகமாய் ஏற்கப்பட்டன.

(ஆ) உத்தியோகஸ்தர் தெரிவை திரு கந்தப்புவின் தலைமையில் நடத்தக்கூடாதென்று அபிப்பிராயம் வெளியிடப்பட்டது.

(இ) பொதுச் செயலாளர் போட்டியில் திரு மகாலிங்கத்தின் பெயர் வந்ததும் அவர் திரு ஏ. கே. சுப்பிரமணியத்தின் கையாள் என்ற சலசலப்பு கூட்டத்தில் கேட்டது.

(ஈ) தலைவர் தேர்தலின் போது தலைவர் தேர்தலுக்கு நின்ற திரு ஏ. கே. சுப்பிரமணியம் தமது பெயரை வாபஸ் வாங்கியது மகாலிங்கத்தின் தோல்வி வேறு வழியின்றி அவரை அப்படிச் செய்யத் தூண்டியது என்றும்; தலைவர் போட்டிக்கு நின்ற சந்திரசேகரியின் செல்வாக்கைக் கண்டு வெற்றிகரமாகப் பின்வாங்கிவிட்டாரென்றும் கேலியாகப் பேசிக் கொண்டார்கள்--சுதந்திரன் செய்தியில் இப்படிக் கூறப்பட்டிருந்தன யாவும் உண்மையற்றனவாகும்.

### அறிக்கைகள்

அறிக்கைகள் காலைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது அவை பொது நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறாமலும், தலைவரின் ஒப்பம் பெறாமலும், தலைவரின் கள்ளக் கையொப்பத்துடன் பொதுச் செயலாளரால் 6-4-59ல் அச்சிட்டு வெளியிடப்பட்டமையால் அவை புது உத்தியோகஸ்தர் தெரிவின் பின், பிற்பகல் கூட்டத்தில் பரிசீலனை செய்யப் பின் போடப்பட்டன. பின்னர் பிற்பகல் கூட்டத்தில் கோரமின்மையால் அறிக்கைகள் ஆராயப்படாமலும், அங்கீகரிக்கப்படாமலும் பொதுச் சபைக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

திரு கந்தப்பு தலைமையில் தெரிவு நடத்தக் கூடாது என்று எவருமே அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

### 'கையாள்' என்ற சலசலப்பு இல்லை

திரு மகாலிங்கம் எனது கையாள் அல்லவென்பதையும் அவர் சங்க ஆரம்பகால முதல் சங்க வளர்ச்சிக்காக அதிகம் தொண்டாற்றியவர் என்பதையும் அதற்காகவே பலரும் அவரை ஆதரிக்கின்றனர் என்பதையும் சங்கத்தில் எனது கையாள் எவருமே இல்லையென்பதையும் "மகாலிங்கம் எனது கையாள் என்ற சலசலப்பு" கூட்டத்தில் கேட்கவில்லை என்பதையும் பகிரங்கமாகக் கூற விரும்புகிறேன்.

### போட்டி மனப்பான்மை கூடாது

பொது ஸ்தாபனத்தில் போட்டி மனப்பான்மை கூடாதென்பதே என் கொள்கை. ஆதலால் ஒருபோதும் எப்பதவிக்கும் போட்டியிட யான் விரும்புவதில்லை. 1955லும் 1956லும் பொது தனாதிகாரியாய் இருந்த என்னை 1957ம் வருடம் மட்டக்களப்பிலும் 1958ம் வருடம் கொழும்பிலும் நடந்த சங்கத் தெரிவுகளின்போது பொதுத் தனாதிகாரியாகப் போட்டிக்குப் பலர் நிறுத்தியபோது நான் வேறொருவரை பிரேரித்து அவரையே ஏகமனதாகத் தெரிவு செய்யும்படி கூறி எனது பெயரை வாபஸ் வாங்கிக்கொண்டேன். இது சகல அங்கத்தவர்களும் அறிந்த விஷயம்.

### ஏன் வாபஸ் வாங்கினேன்?

இம்முறை பல முக்கிய பதவிகளுக்குரிய அபேட்சை பத்திரங்களில் ஒப்பமிடும்படி என்னைப் பல கிளைகள் வேண்டியும் யான் மறுத்துக் கடைசியில் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தலைவர், உபதலைவர் ஆகிய இரு நியமனங்களுக்குரிய அபேட்சை பத்திரங்களில் மட்டும் ஒப்பமிட்டேன். தலைவர் பதவிக்குத் தகுதியான இருவர் போட்டியிட முன்வந்தமையால், போட்டி மனப்பான்மையைக் குறைக்கும் நோக்கத்துடன் எனது பெயரை வாபஸ் வாங்கினேனே தவிர மகாலிங்கத்தின் தோல்வியையோ, சந்திரசேகரியின் செல்வாக்கையோ கண்டு பயந்து பின்வாங்கவில்லையென்பதை தெரிவிக்கிறேன். மேலும், இப்பிழையான அபிப்பிராயத்தை சுதந்தி

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



**குயுக்தி**

சி. பி. காலித், கல்கமுவ

கே: எதுவரை படித்தால் உங்களைப்போல் பதில் சொல்லலாம்?

ப:என்னைப்போலப் பதில் தருவதற்கு பேராதனைப் பட்டம் பெற்ருல் போதாது. உலகம் என்ற உலைக்களத்தில் அடிபட்டு, அனுபவம் என்ற ஆய்கூடத்தில் பயிற்சி பெற்று, விவேகம் என்ற வித்தியாபீடத்தில் பட்டம்பெற்ருல்தான் முடியும் அப்பனே!

ஃ

வ. கணபதிப்பிள்ளை,
ஆலங்கேணி

கே: சிவபெருமான் பார்வதி தம்பதிகளுக்கு கணபதி கந்தசாமி என்ற இரண்டு பிள்ளைகளைவிட அதன் பின்னர் குழந்தைகள் பிறக்கவில்லையா?

ப: இல்லை. அகஸ்தியரிடம் கேட்டு அவர்கள் சர்ப்பத்தடை செய்துகொண்டார்கள் என்று இன்போர்மேஷன் ஆபீஸர் திரு நந்திகேஸ்வரர் தெரிவிக்கிருர்.

ஃ

மு. செல்வராஜன்,
யாழ்ப்பாணம்.

கே: கடந்த வருடம் இலங்கையின் துணி இறக்குமதி குறைந்து விட்டதாமே. மார்க்கட் மந்தமா? துறைமுகத் தொந்தரவா? காரணம் என்ன?

ப: அடுப்பு ஊதும் பெண்கள் எல்லாம் இடுப்புத் தெரியவும், கல்லூரிக் கன்னியரெல்லாம் கால் தொடை தெரியவும் சேலையும் கவுனும் அணிந்தால் துணி இறக்குமதி குறைய வேண்டியதுதானே.

ஃ

வி. குமார், தெல்லிப்பழை.

கே: இக் காலப் பெண்கள் ஏன் திரிகைக் கல் அளவு கொண்டை கட்டுகிருர்கள்?

ப: போகும் இடத்தில் அவசியம் ஏற்பட்டால் தலையணை யில்லாமலே சரிந்து கொள்வதற்காக.

ஃ

கே. ஆர். சிங்கம், கணேசபுரம்.

கே: பெண்களைப் பஸ் கண்டக்டர்களாக நியமித்தால் என்ன?

ப: நியமித்தால் என்ன, முன் ஆசனங்களை விடப் பின் ஆசனங்களுக்குத்தான் கிராக்கி அதிகமாக இருக்கும். அத்தோடு டிரைவர் முன்ஞல் ரோட்டைப் பார்ப்பதற்குப் பதிலாக அடிக்கடி தலைக்கு மேலே உள்ள கண்ணுடியில் பின்ஞல் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்வார். விபத்துக்கள் அதிகரிக்கும்!

ஃ

எம். சிவனுப்பிள்ளை,
கொஸ்லாந்தை.

கே:இலங்கைத் தி.மு க.பிரமுகர் இரா. அதிமணியைத் தங்களுக்குத் தெரியுமா? அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: திரு இரா. அதிமணி குடும்ப நண்பர். தி. மு. க. வட்டாரத்திலேயே உயர்ந்த பண்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியுமாஞல் அவர் இரா. அதிமணி தான். நல்ல பேச்சாளர். உழைப்பாளி. அவருடைய பணத்தில்தான் இலங்கையில் பலர் தங்களைத் தி. மு. க. தூண்கள் என்று காட்டிக்கொள்ளுகிருர்கள். சுமார் எட்டு ஒன்பது வருடங்களுக்கு முன்ஞல் அவருடைய மூத்த பெண்ணுக்கு மல்லிகா என்று பெயர் சூட்டும்பேறு எனக்குக் கிடைத்தது.

ஃ

தென்றல்வாசன், கிரேக்மோர்.

கே: தாங்கள் காதல் விவகாரத்திலிருந்து எப்படித் தப்பினீர்கள்?

ப: தப்பினதாவது மண்ணுங்கட்டியாவது. குப்புற விழுந்தல்லவா இன்றுவரை தத்தளிக்கிறேன்!

ஃ

இ. அந்தோனிப்பிள்ளை,
தும்பகொட.

கே: துன்பத்தில் பெரியது எது? இன்பத்தில் பெரியது எது?

ப: ஏற்பது பெரிய துன்பம். ஈவது பெரிய இன்பம்.

ஃ

பெ. ரங்கசாமி,
வல்வெட்டித்துறை.

கே: காலஞ்சென்ற திரு எஸ். டி. சேனநாயகாவைச் சிங்கள மக்கள் பலர் தீர்க்க தரிசி என்று கொண்டாடுகிருர்களே. இக் கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

ப: "யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் முதலில் எதையும் எதிர்ப்பார்கள்; பின்னர் தாமாகவே ஏற்றுக் கொள்வார்கள்" என்று திரு டி. எஸ். சேனநாயகா ஒரு முறை கூறிஞர். இதை நான் நம்பவில்லை. எதிர்த்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்காலிலேயே சரணடைந்த போது டி.எஸ். ஸின் கூற்றுத் தீர்க்கதரிசனம்தானே என்று சந்தேகப்பட்டேன். இப்போது சிங்கள சிறீ எதிர்ப்பு, சிங்கள மந்திரிகளுக்கு தமிழ்ப்பகுதிகளில் எதிர்ப்பு, சிங்களம் படிக்க எதிர்ப்பு, ஆகிய இத்தகைய எதிர்ப்புகளைத் தளர்த்தி தமிழ் மக்கள் திரு டி. எஸ். சேனநாயகாவை உண்மையாகவே தீர்க்கதரிசியாக்கி விடுவார்களோ என்று கவலைப்படுகிறேன்.

ஃ

இராசரத்தினம்,
கொத்தாவத்தை.

கே: காங்கேசந்துறையைத் தாம் ஒரு வர்த்தகத் துறைமுகமாகத் திறக்கப்போவதாக யு. என். பி. யோடு ஒட்டிக் கொண்டிருக்கையில் சூஞ நடேசஞர் சூள் உரைத்தாரல்லவா? திறந்து விட்டாரா?

ப: பொது விஷயங்களில் வாய்கூடத் திறக்காமல் மறைமுகமாக இருந்துவரும் இவரா துறைமுகத்தைத் திறக்கப்போகிருர்?

ஃ

எம். எஸ். ஏ. சலீம்,
கொழும்பு.

கே: ஏழை எப்போதாவது சந்தோஷமடைகிருஞ?

ப: ஆம், நித்திரையில். கை நிறையப் பணம் கிடைப்பதாகக் கனவு காணும் போது!

கே: குயுக்தியாரே, நீர் எந்த மதத்தைச் சேர்ந்தவர். சொல்லுவீரா?

ப: ஆம். சொல்வேனே. சுத்தத்தால் நான் ஒரு சைவன். பயன் கருதாச் சித்தத்தால் ஒரு வைஷ்ணவன். இன்ஞ செய்தார்க்கு நன்னயம் செய்யும் வாஞ்சையால் கிறிஸ்தவன். எல்லோரும் ஓர் குலம் என்னும் எண்ணத்தால் இஸ்லாமியன். எப் பொருளிலும் மெய்ப்பொருள் காணும் பண்பிஞல் பகுத்தறிவுவாதி. எனவே எம் மதமும் சம்மதமாக நான் சார்ந்து நிற்கும் மதத்தின் பெயர் இம்மதம் [illegible]

ஃ

டி. றேச், மன்னார்.

கே: மெத்தப் படித்தவர் சுத்தப் பயித்தியர், அறக்கூர் மழு மொட்டை என்ருல் என்ன பொருள்?

ப: சிறீமான் அந்தர லிங்கம் என்று பொருள்.

ஃ

என். இராசம்மா, கந்தகெதரை.

கே: உங்கட்குத் தெரியாதது ஒன்றுமே இல்லையா?

ப: ஏன் இல்லை? இல்லாததைச் சொல்ல எனக்குத் தெரியாதே.

ஃ

ஜே. ஜேக்கப், இளவாலை.

கே: கபால இடி குணமாவதற்கு என்ன செய்யலாம்?

ப: சாதிக்காய், சுராம்பு, வேர்க்கொம்பு ஆகிய மூன்றையும் முதலில் தயிர் வளைச் சாற்றைவிட்டு அரைத்துப் பின் எலுமிச்சம் புளி கூட்டி நீர் வெற்றிலையில் பூசி, கீழே தேங்காய் எண்ணெய்த் திரி கொண்டு சூடு காட்டி நெற்றியில் போடத் தீராத தலையிடி கபாலக்குத்து எல்லாம் தீரும்.

ஃ

கே. பத்மநாதன், துன்னலை.

கே: நான் பாடசாலைக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் ஒரு பெண் என்னைப் பார்த்தபடி இருக்கிருள். அதன் மர்மம் என்ன?

ப: புதினம் பார்ப்பதற்காகத் தெருவை நோக்கிக் கொண்டிருக்கும் ஒன்றுமறியாத ஒரு பெண்ணைப் பாடசாலைக்குப் போகும் ஒரு தடியன் தினமும் திரும்பித் திரும்பித் பார்த்துக் கொட்டாவி விடுகிருன். இதன் மர்மம் என்ன?

ஃ

வி. குமரேசன், ஓமந்தை.

கே: குயுக்தியாருக்கு டாக்டர் பட்டமென்ருல், அவர் மனைவியாருக்கு......?

ப: குறைந்த பட்சம் 'நர்ஸ்'பட்டமாவது கொடுக்கவேண்டாமா?

கே: இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள் என்று சான்ருேர் கூறுகிருர்களே, எது இல்லாதவனை?

ப: எதுவும் இல்லாதவனை!

---

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

---

## வள்ளி வருவதேன்?

—:—:—:—:—:—

"ஜீவா"

துள்ளும் கவின் மயல் கொள்ளும் விழியுடை
வள்ளியென் னில்லம் வருவதேன்?—இளம்
வள்ளியென் னில்லம் வருவதேன்—அவள்
கிள்ளை மொழியினைக் கேட்டென் அகத்திடைக்
கட்டிக் கரும்பெலாஞ் சாய்வதேன்?—அந்தக்
கட்டிக் கரும்பெலாஞ் சாய்வதேன்...(துள்ளும்)

வட்ட முகத்திடை
சொட்டும் களையிட்டுக்
கட்டு கவியெனச் சாற்றவா?—இல்லை
கிட்டே வந் தென்னுடல்
தொட்டு மனத்திடை
மட்டில்லா இன்னமு தூற்றவா?
.........(துள்ளும்)

அஞ்சனக் கூந்தல்
அழகினைக் காட்டியென்
நெஞ்சத்தே பாசத்தை வீசவா—இல்லை
கொஞ்சுமினிமைக்
குரலிஞ லென்னெடு
கெஞ்சிக் காதல் மொழி பேசவா?
.........(துள்ளும்)

முல்லை மலரூட்டும்
மோகத்தைப் போன்றவள்
பல்லி னெழிலினைக் காட்டவா?—இல்லை
அல்லி யரும்பினைப்
போல வழகொளிர்
கொஸ்லு மிருகுமிழ் நீட்டவா?
.........(துள்ளும்)

---


# "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. நமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி(EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ருப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15 -
(மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

## சுக ஆதார வைத்தியசாலை

MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கன்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவழித் தமிழன் கழுத்தில் கத்தி!

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத் தமது 6 நாள் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு கடந்த 22-ந் தேதி தாய் நாடு திரும்பிவிட்டார். நாமும் இந்தச் சந்தர்ப்பத்தில், நடந்தவற்றையெல்லாம் திரும்பிப் பார்ப்பது நலம் அல்லவா?

"ஜனாதிபதிக்கு இலங்கையில் அளிக்கப்பட்ட மகோன்னதமான வரவேற்பு பிரமாதம். அரசாங்கமும் மக்களும் அவருக்கு செய்த அன்பு உபசாரம் ஈடு இணையற்றது"—இப்படி இன்றும் பேசிக் கொள்ளப்படுகிறது. உலக நாடுகள் பலவற்றுக்கும் (ஆமாம் அந்தந்த நாட்டு அழைப்பின்பேரில்தான்) அவ்வப்போது விஜயம் செய்வதைத் தமது கடமைகளில் ஒன்றாகவோ அல்லது பொழுதுபோக்காகவோ கொள்ளும் ஜனாதிபதி இலங்கை விஜயத்தையும் அப்படிச் சாதாரணமான ஒன்றாகவே மதித்திருப்பார்.

### ஆனா அப்படியே உலுக்கியிருக்கும்

ஆனால் இலங்கைஅவரைத் திணறடித்துவிட்டது. 16-ந் தேதி காலை ரத்துமலானை மண்ணில் காலடி வைத்ததிலிருந்து அவருக்கு புதியதோர் அனுபவம் கிடைப்பதாயிற்று. சென்ற இடமெல்லாம் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் அவரைக் காணக் கூட்டம் கூட்டமாக நின்ற காட்சி ஜனாதிபதியை உலுக்கியிருக்கும்.

டாக்டர் பிரஸாத் இலங்கையில் எங்கு சென்றாலும் அவருடைய மெய்க்காப்பாளர்கள் அவரோடு போனதுபோல, வேறு யார் போனாலும் போகாவிட்டாலும் நமது வானொலி நிலையத்து ஒலிவாங்கிகளும், ஒலிப் பதிவுக் கருவிகளும், அரசாங்கப் பிலிம் பகுதிக் கமிராக்களும் தவறாமல் கூடவே சென்றன. அதன் பலன் ஓரளவுக்கு இதுவரை கிடைத்துவிட்டது. இன்னும் கிடைப்பதற்கு படங்கள் திரையிடத் தயாராக வேண்டும்.

### காட்டியது பல்லும் பழைய கட்டடங்களும்

இலங்கையில் ஜனாதிபதி

## ராஜேந்திரப் பிரஸாத்துக்கு அதே வேளையில் பிரமாதமான வரவேற்பு

## இரு நாட்டின் நல்லுறவு பற்றி இனிப்பான பேச்சு வேறு-வேடிக்கை இல்லை?

தங்கியிருந்த சமயம் அவரை எவ்வளவு குதூகலமாக வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்கு அரசாங்கம் முயன்றது. 74 வயதான அவரைச் சீரழிந்த பழைய நகரங்களிலுள்ள பாழடைந்த கட்டடங்களுக்கு அருகில் கூட்டிச் சென்று காட்டினார்கள்.

ஜனாதிபதியின் சொந்த மாகாணத்தில் பிறந்த புத்தரின் புனித பல்லைப் பிரத்தியேகமாக அவருக்குத் திறந்து காட்டினார்கள். 'புத்தர் வாழ்ந்த காலத்தில் நம்மவர்கள் ராட்சதர்களாய் இருந்ததாகச் சரித்திரமே இல்லையே! அத்தனை பெரிய பல் அங்குள்ள மனிதருக்கு இன்றும் இல்லை; அன்றும் இருந்திருக்கவில்லையே!' என்று டாக்டர் பிரஸாத் ஒருவேளை மனதுக்குள் எண்ணியிருக்கலாம். வெளியில் வாய் திறந்து அப்படி ஒன்றும் பேசவில்லை.

பேராதனைப் பூந்தோட்டத்தில் மரம் நாட்டுவித்தார்கள் அவரைக்கொண்டு. பல்கலைக் கழகத்தில் அவருக்கு கௌரவ பட்டம் வழங்கினார்கள். பல பௌத்த நிலையங்களுக்கும் கொழும்பு ராமக்கிருஷ்ண மிஷனுக்கும் அவரை அழைத்துச் சென்றார்கள்;

### கிடைத்ததும் கிடையாததும்

பௌத்த நிலையங்களிலும் பிற இடங்களிலும் டாக்டர் பிரஸாத்தைப்பற்றிப்பேசிய பௌத்த அன்பர்கள் அவர் வட இந்தியாவில் பௌத்தம் வளரவும் பௌத்த கலாச்சாரம் நிலைபெறவும் செய்துவரும் பணிகளுக்காக அவரைப் பாராட்டினார்கள். "பௌத்தத்தை—பௌத்த கலாசாரத்தை இலங்கைக்கு ஈய்ந்தவர்கள் தாங்கள். அதற்கு நாம் என்றென்றும் தங்களுக்கு கடமைப்பட்டவர்கள்" என்றவாறும் பேசினார்கள்.

"பௌத்தத்தின் உயிர்நாடியான சகிப்புத்தன்மை, 'வாழு—வாழவிடு' கொள்

தேசபந்து

கைகளைக் கோட்டை விட்டு விட்டு, ஓட்டைப் பந்தாக, சாறு பிழிந்த சக்கையாக, சுளை நீக்கிய தோலாகப் பௌத்தத்தைத் தந்துவிட்



டாக்டர் ராஜேந்திர பிரஸாத்

டீர்களே" என்று யாரும் வருத்தந் தெரிவிக்கவில்லை. இந்தியாவிடம் தற்போது இல்லாததையும் தமக்கே இன்றைய நிலையில் வேண்டாததையும் பிரஸாத்திடம் பிரஸ்தாபித்துப் பயனில்லை என்று அவர்கள் விட்டிருக்கலாம். தொலையட்டும் அது!

### யாழ்ப்பாணத்தில் ஏகத் தடபுடல்

யாழ்ப்பாணத்து மக்கள் ஜனாதிபதி பிரஸாத்தை திக்குமுக்காடச் செய்துவிட்டார்கள். தாய்நாடு திரும்பும் வழியில் சிலமணி நேரம் மட்டும் யாழ்ப்பாணத்தில் தங்கும் தமக்கு அத்தனை தடபுடல்கள் செய்யப்பட்டிருக்கும் என்று அவர் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார். வீதியெங்கும் மக்கள் அணிவகுப்பு என்றுதான் சொல்ல வேண்டும். கும்பிட்ட கைகளைக் குலைத்துக் கொள்ளவோ அல்லது வரவழைத்த புன்முறுவலைப் பிழைத்துப் போ என்று விட்டுவிடவோ சந்தர்ப்பம் இல்லை. சங்கடமான நிலை.

### ஆஹா! இவர்கள் அல்லவா தமிழர்கள்!

நகர மண்டபத்துள் தம்மைப்பற்றி மேயர் திரு அல்பிரட் துரையப்பா பேசியதையெல்லாம் டாக்டர் பிரஸாத் கேட்டபோது தாம் உண்மையில் மேயர் வர்ணிக்கும் மனிதர்தானா என்ற ஐயம் அவருக்கு எழுந்ததோ என்னவோ! ஒருமாதிரியாக இருந்தார். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குத்தான் என்னைப் பிடிக்கவில்லை. யாழ்ப்பாணத் தமிழர்கள் எவ்வளவு பக்தி விசுவாசத்தோடு இருக்கிறார்கள்! ... இவர்கள் அல்லவா தமிழர்கள்! என்றும் அவர் எண்ணியிருக்கலாம். நகர சபை வர

வேற்புக்கு அவர் பதிலளிக்கையில் "யாழ்ப்பாணத்துக்கு நான் வராதுபோயிருந்தால் என்னுடைய இலங்கை விஜயம் பூர்த்தியாகியிருக்காது" என்றுகூறினார். இந்த ஒரே ஒரு வாக்கியத்தில் யாழ்ப்பாண மக்களின் வரவேற்பு உபசாரம் எப்படி பிரஸாத்தைக்கவர்ந்தது என்பதற்கான விடை அடங்கியிருக்கிறது.

### உபசார வார்த்தைகள்

ஜனாதிபதிகலந்துகொண்ட வைபவங்களிலெல்லாம் எந்த நிலைமையிலும் சகிப்புத்தன்மை வேண்டும் என்று வற்புறுத்தியதைவிட இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமுரிய பிரச்னைகள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியானவை என்றும் இரு நாடுகளும் நேசப்பான்மையோடு முன்னேற்றம் நாடிக் கடினமாக உழைக்க வேண்டும் என்றும் கூறினார்.

ஜனாதிபதிக்கு உபசார வார்த்தைகள் கூறியவர்கள் ஒரு விஷயத்தை நன்கு வற்புறுத்தினார்கள். அதாவது இந்திய சுதந்திரப் போரில் மகாத்மா காந்தி ஈடுபட்டிருந்த சமயம் அவருக்குப் பக்கத்துணையாக இருந்து பணியாற்றிய தியாகிகளில் பிரஸாத்தும் ஒருவர் என்பதை ஞாபகப்படுத்தினார்கள். "இந்தியா சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்துதான் இலங்கையும் சுதந்திரம் பெற முடிந்தது"—இப்படியும் சொன்னார்கள்.

### இந்தி-சிங்களம் திணிப்பு

இந்தத் தொடர்பில் சொல்ல வேண்டிய இரண்டொரு விஷயங்கள் விடுபட்டுப்போனது குறை. "சுதந்திர இந்தியாவில் தென்னாட்டை-அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மேன்மை தங்கிய தங்களின் நேரு அரசாங்கம் அனுஷ்டிக்கும் பாரபட்சக் கொள்கையைத்தான் நமது சிங்கள பண்டா அரசாங்கமும் இங்கு பின்பற்றுகிறது. இந்தியை எல்லோருடைய தொண்டைக்குள்ளும் கரைத்து ஊற்றத் தாங்கள் அங்கு தீவிரமாக முனைந்து வருகிறீர்கள். நாமும் இங்கு அப்படித்தான் சிங்களத்தை எது விதத்திலும் தமிழரிடம் திணித்துவிட நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

### ஊர், வீதி பெயர் மாற்றம்

"தமிழ் நாட்டிலே உள்ள பழந் தமிழ் ஊர்களுக்கு வடநாட்டாரின் இந்திப் பெயர்கள் சூட்டி வருகிறீர்கள். 'டால்மியாபுரம்' 'சாகுபுரம்' இவற்றையெல்லாம் பிரசவித்திருக்கிறீர்கள். நாமும் விட்டோமா? தமிழ்ப் பெயர்களைத் தொலைத்து விட்டு அசல் தமிழ் கிராமங்களுக்கும் வீதிகளுக்கும் சிங்களப் பெயர்கள் சூட்டி வருகிறோம். தட்டாதெருவை 'பண்டாரநாயக மாவத்தை' யாக்கிவிட்டோம். இன்னும் 'அக்போபுர', 'மொரவெவா' -இப்படி எத்தனையோ புதுப் பெயர்களைச் சிருஷ்டித்திருக்கிறோம்."—இப்படிச் சொல்லிக்காட்டியிருந்தால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள முக்கியமான ஒற்றுமைகள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் இந்திய அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் எவ்வளவு கனகச்சிதமாக அடியொற்றி நடவடிக்கைகள் எடுத்துவருகிறது என்பது தெளிவாகியிருக்கும்.

### இந்தியர் விருந்தில் பிரஸாத்

இந்திய சமூகத்தினர் ஜனாதிபதி ராஜேந்திரப் பிரஸாத்துக்கு அளித்த விருந்து ஒன்றில் பேசப்பட்ட பேச்சுக்கள் கவனத்துக்குரியவையாகும்.

(9-ம் பக்கம் பார்க்க)


'சுதந்திரன்' வாசகர்களுக்கு ஓர் இன்பகரமான நற் செய்தி!

சிவகுரு தேவாம்ருதம்




இளமையோடு இருப்பது எப்படி? இன்பகரமாய் குடும்பம் நடத்துவது எப்படி? மக்களைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வது எப்படி? பரீட்சையில் பாஸ் பண்ணுவது எப்படி? என்று சிந்தித்து கவலையுற்றிருக்கும் குடும்பத்தினர்களுக்கும், மாணவர்களுக்கும்.

★ குன்றாத ஆரோக்கியமும்,
★ குறைவிலா, உடல் வலிமையும்,
★ மானத மனோதிடமும் வேண்டும்.

இவற்றை எளிதில் பெற்று இன்புற்றுவாழ விரும்புவோர்களுக்கு சிவகுரு தேவாம்ருதம் ஓர் சிறந்த வரப் பிரசாதமாகும்.

இன்றே ஒரு போத்தல் 'சிவகுரு தேவாம்ருதம்' வாங்கிச் சாப்பிட்டு குறிப்பிட்ட பலனை அடைய முந்துங்கள்.

இலங்கையில் எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. முழு விபரங்கள் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

கலாமோகன் கம்பெனி,

151, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.


## சங்கப் பலகை

தையற்கலை :

ஆசிரியர்: கே. பி. சுந்தரம். வெளியீட்டு அலுவலகம்: 132, புரசை நெடுஞ் சாலை சென்னை-7. இலங்கையில் சோல் ஏஜன்டுகள்! தென்னவன் நூலகம், 168, செட்டியார் தெரு, கொழும்பு 11. பிரதி ஒன்றின் விலை சதம் 20.

தையற் கலையில் விற்பன்னரான சுந்தரம் அக்கலை பற்றி எழுதிய நூல்கள் பலவும் புதிதாகத் தையற் கலையில் தேர்ச்சி பெற விரும்புபவர்களாலும், அந்தத் தொழில் துறையில் ஈடுபட்டு இருப்பவர்களாலும். பெரிதும் அக்கறையோடு படிக்கப்படுவது தெரிந்ததே. இத்துறையில் தகுதிவாய்ந்த திரு. சுந்தரமே "தையற் கலை" திங்களிதழின் ஆசிரியர் என்றால் இதழின் தரத்தைப் பற்றி வேறு எதுவும் கூறவேண்டியதில்லை. கிடைக்கப் பெற்றிருக்கும் முதல் இரண்டு இதழ்களையும் கொண்டு பார்த்தால் தையற்கலை சம்பந்தப்பட்ட மட்டில் "தையற் கலை" திங்கள் இதழை இத்துறையில் ஓர் இலட்சிய ஏடு என்றே சொல்லத் தோன்றுகிறது.

தையற் கலையைச் சுயமாகக் கற்க விரும்புபவர்களுக்கும் தொழிலாகச் செய்து வருபவர்களுக்கும் பயன்படத்தக்க வகையில் தெளிவான நடையில் நுணுக்கமான விஷயங்கள் விளக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன. கடதாசி எடுத்து மாதிரி அமைப்பு அதில் வெட்டிக் கொள்வது தொடக்கம் துணியை ஆடையாகத் தைத்த பின்னால் கடைசியாகக் "காசா" பிடிப்பது வரையுள்ள சகல விஷயங்களும் ஒவ்வொரு இதழிலும் விளக்கப்படும் என்று தெரிகிறது.

குறிப்பாக இரண்டாவது இதழில் அறிஞர் அண்ணா, டாக்டர் மு. வரதராசனார், பன் மொழிப் புலவர் கா. அப்பாத்துரை ஆகியோரின் தையற் கலை சம்பந்தமான எழுத்தோவியங்களும் தரப்பட்டிருக்கின்றன.

அழகான வர்ண முகப்புடன் எடுப்பான வகையில் இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. தையற் கலையில் ஆர்வம் உள்ள பெண்கள் ஆண்கள் அனைவருக்கும் "தையற்கலை" இதழை சிபார்சு செய்வதில் எமக்குத் தயக்கம் இல்லை. துணிந்து செய்கிறோம். சுந்தரத்தின் முயற்சியை பாராட்டுகிறோம். — கேயாரெஸ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'ஆகாஷ்வாணி' போராட்டம்:

# தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் கைது!

## இந்தி அழிக்க தார்ச் சட்டி

### பிரஷ் சகிதம் சென்றதன் விளைவு

## திருச்சி சிறையில் காவலில் வைத்திருக்கிறார்கள்

## அண்ணா அங்கே சென்று அவரைப் பார்த்தார்

## இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது

சென்னை ஜூன் 25—

வானொலிப் போராட்டத்தில் குடும்பத்தோடு குதித்து திருச்சி நிலையத்தின் முன் மறியல் நடத்தி வந்த தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையிலே காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

வானொலி நிலையத்தை 'ஆகாஷ்வாணி' என்று அழைப்பதை நிறுத்திக் கொண்டு 'வானொலி' என்றே தமிழில் சொல்ல வேண்டும் என்று கோரி வானொலிப் போராட்டம் நடந்து வருவது தெரிந்ததே. இப்போராட்டத்தில் இதுவரை 36 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

### தார்ச்சட்டி இயக்கம்

இந்தப் போராட்டத்தில் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். திருச்சி வானொலி நிலையத்தின் முன் வாசலில் 'ஆகாஷ்வாணி' என்று இந்தியில் எழுதப்பட்டிருப்பதை தார்ச் சட்டி பிரஷ் சகிதம் ஊர்வலமாகச் சென்று அழிக்கப் புறப்பட்டார். அப்பொழுதே அவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மாஜிஸ்திரேட்டின் உத்தரவின் பேரில் சிறையில் தள்ளப்பட்டார்.

### வேண்டுகோள்

மேற்படி ஊர்வலத்தில் நாம் தமிழர் இயக்கத்தினரும் கலந்துகொண்டனர். அந்த இயக்கத் தலைவர் சி. பா. ஆதித்தனார் கி. ஆ. பெ விசுவநாதம் கைது செய்யப்பட்டபோது அவர் கூடவே நின்றார். கி. ஆ. பெ. விசுவநாதம் கைதாகியதும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்படி அங்கு நின்றவர்களைக் கேட்டுக்கொண்டார்.

### கைதானவர்கள்

இப்போது தினமும் போராட்டம் நடந்து வருகிறது. ஊர்வலமாகத் தார்ச் சட்டி பிரஷ் சகிதம் வந்து தொண்டர்கள் இந்தி எழுத்துக்களை அழிக்க விரையும் போது பொலீஸார் லபக்கென்று பாய்ந்து அவர்களைக் கைது செய்துகொள்கிறார்கள். இப்போராட்டத்தில் இதுவரை கைதான 36 பேரில் பலர் "நாம் தமிழர்" இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

### அண்ணா, பெரியார், கி. ஆ. பெ. விசுவநாதம்

பெரியாரின் திராவிட கழகமும் அண்ணாவின் தி. மு.



திரு கி. ஆ. பெ. விசிவநாதம்

கழகமும் போராட்டத்தில் கலந்துகொள்ளும் என்று தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் நம்பிக்கை தெரிவித்தார். அண்ணா தமிழறிஞரைச் சிறையில் சந்தித்துப் பேசினார். பெரியார் போராட்டம் தொடங்கப்பட்டபோதே கி. ஆ. பெ. யைச் சந்தித்துப் பேசி அவருக்குத் தமது ஆதரவு உண்டு என்று நிச்சயமாகக்கூறினார்.

### புதிர்

ஆயினும் அதிகாரபூர்வமாக தி. கவும் தி. மு. கழகமும் இன்னும் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அதற்கான காரணத்தைப் பெரியார் இதுவரை விளக்கவில்லை. பொதுக் குழு முடிவு

### சென்னைக் கடிதம்

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

செய்த பின்னரே தி. மு. கழகம் போராட்டத்தில் இறங்கும் என்று அண்ணாவும் மற்றைய தி. மு. க. தலைவர்களும் சொல்லி வருகிறார்கள். முடிவு செய்ய ஏன் இவ்வளவு தாமதம்—தயக்கம்? இதுதான் எல்லோருக்கும் ஒரே புதிராக இருக்கிறது. ஒருவேளை தி. மு. க. தட்டிக் கழிக்கப் பார்க்கிறதோ என்றும் சிலர் சந்தேகிக்கிறார்கள்;

### ம. பொ. சியும் ஜீவாவும்

சென்னை மேயர் அ. பொ. அரசுவும் தமிழ் நாட்டிலுள்ள கலைஞர்களும் மற்றும் அறிஞர்களும் அரசியல் கட்சித் தலைவர்களும் "ஆகாஷ்வாணி"க்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள மறுத்து வருவது ஒருபுறமும் தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் போராட்டம் மூலம் நேரடி நடவடிக்கை மறுபுறமும் நடைபெற்று [illegible] த் தலைவரான ம. பொ. சிவஞானமும் பிரபல கம்யூனிஸ்டு தலைவரான ப. ஜீவானந்தமும் சமீபத்தில் நடந்துகொண்ட விதம் பலரின் மனதையும் புண்படுத்தியுள்ளது.

### 'ஆகாஷ்வாணி'யில் பேச்சு

திரு ஜீவானந்தம் கடந்த வார இறுதியில் சென்னை நிலையத்தில் "ஷெய்குத் தம்பிப் பாவலர்" என்ற தலைப்பில் பேச்சு ஒன்று நிகழ்த்தினார். திரு ம. பொ. சிவஞானமும் சில வாரங்களுக்கு முன்னர் அதே சென்னை நிலையத்தில் (ஆகாஷ்வாணி) "மேடைப் பேச்சு" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். மக்கள் உரிமைக்காகவும் தமிழ் மொழிக்காகவும் பாடுபடுவதாகக்கூறிக்கொள்ளும் இந்த இரண்டு 'தலை'களும் இப்படித்தானா நடந்துகொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்கிறார்கள். பேச்சு சந்தர்ப்பமும் சொற்ப பணமும் அப்படி என்ன கிட்டாத அபூர்வச் சரக்குகளா என்றும் கிண்டல் செய்கிறார்கள்.



பிரதமர் நேரு

## கேரளத்தில் நிலைமை மோசம்

பிரதமர் நேருவின் கேரள விஜயம் அங்கு நடைபெற்றுவரும் கிளர்ச்சியை அடக்கி நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி மக்கள் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப் பயன்படும் என்று மனதார நம்பியவர்கள் அடியோடு ஏமாந்து போனார்கள்.

### கிளர்ச்சியை நீடிக்க தீர்மானம்

"நேரு வந்தார்; கண்டார்; பேசினார்: திரும்பிச் சென்றார்" என்ற வகையிலேயே அவருடைய கேரள விஜயம் (22 திங்கள் தொடக்கம் 24 புதன்வரை) சர்வசாதாரணமாக முடிந்துவிட்டது. கேரள பிரதேசக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் ஒன்றரை மணி நேரம் நேரு பேசியதன் பின்னர், கிளர்ச்சியை விடாது தொடர்ந்து நடத்

(13-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### சிறுபான்மைத் தமிழர் மகா சபை

அண்மையில் கூடிய சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கூட்டத்தில் "செயற் குழுவின் முக்கிய அலுவலர்கள் எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் தீவிர பங்கு கொள்ளக் கூடாது." எனக் கொண்டு வரப்பட்ட பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டதாக அறிகிறோம். இதை நினைக்குந் தோறும் பகுத்தறிவுவாதிகளின் உளம் புண்படுகிறது தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காக போராட வேண்டிய மகாசபை தனிப்பட்ட ஒரு கட்சியுடன் இரண்டறக் கலந்து விட்டது மகாசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்கும் என எண்ணுகிறேன்.

— முகிலன்

வேலணை

### எது தமிழ்?

"இலங்கையில் தமிழ் வளரவில்லை வானொலித் தமிழ், தன் மொழி அலுவலகத் தமிழ், பத்திரிகைத் தமிழ், சம்மட்டித் தமிழ், என்று இப்படி வெவ்வேறு தமிழ இங்குண்டு. இந்த நிலையில் தமிழ் எப்படி வளரமுடியும்" எனத் திரு எப். எக்ஸ். ஸி. நடராஜா ஒரு கூட்டத்தில் பேசியதாக 7-6-59 சுதந்திரனில் காணக்கிடக்கின்றது. இங்ஙனம் பேசிய அவர் தொடர்ந்து "எது தமிழ்" என்பதையிட்டுக் கூறியிருத்தலன்றோ ஏற்புடைத்தொன்றும் பயனுள்ளொன்றுமாகும். தங்கள் பத்திரிகை மூலமாவது அதனையிட்டவரறிவுறுத்தின் தமிழு லகமவருக்குப் பெரிதும் கடமைப்பட்ட தொன்றுயிருக்கும்.

— கா. பாக்கியரெத்தினம்

வெள்ளவத்தை

### இ. போ. ச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமரைச் சந்தித்தபோது இந்தப் புதிய ஆலோசனையை அவருக்குத் தெரிவித்தாராம்.

### அரசாங்கத்தின் உடைமைகளே

"ரயில் வண்டிகளைப் போலவே பஸ் வண்டிகளும் அரசாங்கத்தின் உடைமைகளாகிவிட்டன. அவற்றைச் சொந்தக்காரர்களுடைய வண்டிகளுடன் சேர்த்துப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ரயில் என்ஜின்களுக்கும், கம்பார்ட்மெண்டுகளுக்கும் தனியான ஒரு இலக்கம் வழங்கப்பட்டிருப்பதுபோல் இ. போ. ச. பஸ்களுக்கும் தனியான ஒரு தொடர் இலக்கம் வழங்கினால் பிரச்னை தீர்ந்தது" என்று டாக்டர் நாகநாதன் பிரதமரிடம் கூறினாராம். இந்த ஆலோசனையைப் பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதற்கான அறிகுறியாகவே மேற்படி செய்தி நமக்கு கிடைத்துள்ளது.

### நல்ல பஸ்கள்

இ. போ. ச. தலைவர் வேர்டி மெல்லைக் கண்டு யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் நல்ல பஸ் வண்டிகள் அனுப்புமாறு திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமும், டாக்டர் நாகநாதனும் கேட்டுக்கொண்டனர்.

(9-ம் பக்கம் பார்க்க)


## மௌலானா அச்சடி சீத்தைகள்




ரமணீகரமாக காட்சியளிக்க இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்.
★ சாயம் மங்காதவை.
★ நீடிய உழைப்பு.
★ தரத்தில் உயர்வானது.

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும், புத்தம் புதிய டிசைன்களை, தெரிவுசெய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானா (சிலோன்) லிமிட., கொழும்பு, மருதானை, கண்டி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# விவாகச் சட்டம் (2)

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

பராயமற்றவர்கள் பெற்றோரின் அல்லது பராமரிப்புக்காரரின் ஒப்பதல் இல்லாதவிடத்து நீதிபதியின் சம்மதத்தைப் பெற்றே விவாகம் செய்ய வேண்டுமென்று முந்திய கட்டுரையில் விவாகத்தின் இயல்புகளை ஆராயுமிடத்தில் குறிப்பிட்டிருந்தோம். மேற்கூறிய சம்மதமில்லாத சந்தர்ப்பத்தில்விவாகத்தின்கதியென்னவாயிருக்கும் என்பதை இங்கு ஆராய்வோம்.

பழைய ரோமன் டச் சட்டப்படி அப்படிப்பட்ட விவாகம் சூனியமானதும் சட்ட ரீதியற்றது மாய்க் கருதப்பட்ட போதிலும் பிற்கால ரோமன் டச் சட்டப்படி அத்தகைய விவாகம் சட்டரீதியானதே. அதாவது ஒருவரும் இவ் விவாகம் முறையானதல்ல என்றும் இவ்விவாகத்தால் பிறந்த பிள்ளைகள் சட்ட முறையான சந்தானங்களல்லர் என்றும் நீதி மன்றத்தில் ஆட்சேபிக்க இடமில்லை.

## ஆதன உரிமை இழப்பு

ஆனால் இவ்வகையான சம்மத மில்லா விவாகத்தையொட்டி அச் சம்மதம் கொடுக்க வேண்டியவர் மனுப்பண்ணினால் அல்லது நீதி அதிகாரி (Attorney General) மனுப்பண்ணினால் நீதி மன்றம் விவாகம் பண்ணிய தம்பதிகளில் வயது வந்த தம்பதி வயது வராத தம்பதியின் ஆதனங்களில் விவாக சம்பந்தமாகத் தமக்கு வரப்பெற்ற உரிமைகளையிழந்தாரென உத்தரவு கொடுக்கலாம்.

அப்படி உத்தரவு பிறப்பித்தால் மேற் சொல்லிய தம்பதி தன் ஆதன உரிமைகளை இழக்க நேரிடும். விவாக சம்பந்தமாக ஒரு தம்பதிக்கு மற்றைய தம்பதியின் ஆதனங்களில் என்ன உரிமையிருக்கிறதென்பதைப் பின்னர் பார்க்கலாம்.

## தண்டனைக்கு உரியவர்

1907 ஆண்டின் பொது விவாக சட்டமும் இப்படியே நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் வயது வராத தம்பதி மற்றத் தம்பதியின் ஆதனங்களில் வரும் உரிமையையிழக்க மாட்டார். இதனால் அறிய வருவது யாதெனில் பெற்றோரல்லது மற்றையோரின் சம்மதமில்லாமல் விவாகம் செய்தால் 21 வயதுக்கு மேற்பட்ட பராயமுள்ள தம்பதியே பொருளாதார முறையில் தண்டிக்கப் படுவார் என்பதாகும். விவாகம் நடப்பதைப் பார்த்துக் கொண்டு தடை செய்யாது இருந்த பெற்றோர் அல்லது மற்றையோர் வேண்டிய சம்மதத்தைக் கொடுத்ததாகவே கருதப்படும்.

## விவாகங்களில் மதத் தொடர்பு

இனி விவாகத்தின் கடைசியியல்பாகிய விவாக நடைமுறைகளைப் பற்றியாராய்வோம். விவாகம் ஒப்பந்தத்தால் ஏற்படும் ஓர் தொடர்பு எனினும் எல்லாச் சமுதாயத்தினரும் விவாகத்தை ஒரு புனித முறையாகவே கருதுகிறார்கள். சில சமயக் கொள்கைகளின்படி விவாகம் ஒரு தெய்வீகத் தொடர்பெனவும் கருதப்படும். ஆகையால் தெய்வீக முறைப்படி நடவாத விவாகங்கள் முறையான விவாகங்களாகக் கொள்ளப்படவில்லை.

உதாரணமாக ஆங்கிலச் சட்டத்தில் இற்றைக்கு நூறு வருஷங்களுக்குமுன் கிறிஸ்தவ தேவாலயங்களல்லாத வேறிடங்களில் நடந்த விவாகங்கள் முறையற்ற விவாகங்களாகவே கருதப்பட்டன. இப்பொழுதும் மதக்கோட்பாடுகளின்படி தேவாலயங்களல்லாத இடங்களில் நடாத்தப்பட்ட விவாகங்கள் பாவத்தொடர்பெனவே கருதப்படுகின்றன. சமுதாயம் முழு ஆத்மீகத் துறையைக் கைவிட்டு லௌகிகத் துறையிலும் இயங்கும் காலத்தில் மதக் கிரியைகளல்லாத வேறு சட்ட வரம்புக்குட்பட்ட முறையின்படி விவாகம்நடந்தாலே சட்ட ரீதியானதென்னும் கொள்கையேற்படத் தொடங்குகிறது.

## பதிவு வேண்டும்

ஆகவே இருபதாம் நூற்றுண்டில் மதக் கோட்பாடுகள் எப்படி யிருந்தபோதிலும் சமுதாயங்களில் சட்டம் விவாகக் கிரியைகளுக்கு ஒரு விதி வகுத்துள்ளது. அவ் விதிகளைத் தழுவிய சடங்குகளுடன் எவரேனும் விவாகம் செய்தால் அவ் விவாகம் சட்ட ரீதியான விவாகமெனக் கருதப்படும். இதைத் தான் பதிவு விவாகம் (Marriage By Registration) என்று கூறுவர். விவாகம் கட்டாயமாக பதிவு மூலமாயிருக்க வேண்டுமோ மென்னும் விஷயம் பின்னர் ஆராயப்படும். இப்பொழுது பதிவு விவாகம் நடைபெறுவது எப்படி என்பதைக் காண்போம்.

## பதிவுச் சட்டம்

பதிவு விவாகம் நடத்தும் முறைகள் யாவும் 1907-ம் ஆண்டின் பொது விவாகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இச் சட்டம் கண்டியச் சிங்களவர்களுக்கும் இஸ்லாம் மதத்தினருக்கும் விலக்கானது. மற்றைய சமுதாயத்தார் யாவரும் பதிவு விவாகம் செய்யவேண்டின் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையிலேயே செய்ய வேண்டும். இம் முறையில் குறிப்பிட்டபடி முதற் சடங்கு விவாக அறிவித்தலே (Notice of Marriage) ஆகும்.

## விவாக அறிவித்தல்

விவாக அறிவித்தல் கொடுக்கும் முறை வருமாறு: இரு தம்பதிகளும் தாம் தாம் விவாகத்துக்கு முன் பத்து நாட்களாகத் தொடர்ந்து வசித்து வரும் இடங்களுக்கு உரிய விவாகப் பதிவுகாரர்களுக்கு முறையே அறிவித்தல் கொடுக்கவேண்டும். ஆனால் இருவரும் ஒரேபதிவுகாரரின் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் வசித்து வந்தால் ஒருவரே அறிவித்தல் கொடுத்தாலும் போதுமானது.

## தனி ஒருவர் அறிவித்தல் கொடுக்கும் உரிமை

இதைவிட ஒருவர் இலங்கைக்கு வெளியே வசித்து வந்தாலும் மற்றையவர் பத்து நாட்களாக வசித்து வந்த இடத்துப் பதிவுகாரருக்கு அறிவித்தல் கொடுத்தால் போதுமானது இருவரும் இலங்கைக்கு வெளியே வசித்தவர்களாயிருந்தால் அவர்களிலொருவர் ஒரு பகுதியில் நான்கு நாட்கள் தொடர்ந்து வசித்த பிறகு அப்பகுதியின் விவாகப்பதிவுகாரருக்குத் தனியே யறிவித்தல் கொடுத்தாலும் போதுமானது. இதைவிட இன்னொரு சந்தர்ப்பத்திலும் ஒருவர் தனியே விவாக அறிவித்தல் கொடுக்கலாம் அதாவது இருவரும் ஒரே மாகாணப் பதிவுகாரர் (Provincial Registrar) அல்லதுஒரே உதவி மாகாணப் பதிவுகாரரின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் 10 நாட்களாக வசித்து வந்தாலும் ஒருவரே அம் மாகாண அல்லது உதவி மாகாணப் பதிவுகாரருக்கு விவாக அறிவித்தல் கொடுக்கலாம்.

## அச்சுப் பத்திரம் வேண்டும்

விவாக அறிவித்தல் குறிப்பிடப்பட்ட அச்சடித்த பத்திரத்திலே கொடுக்கப்பட வேண்டும். விவாகத் தம்பதிகள் பராய மற்றவர்களாயிருந்தால் அப் பத்திரத்திலே அவ் விவாகத்துக்குச் சட்ட முறைப்படி சம்மதம் கொடுக்க வேண்டியவர் சம்மதம் கொடுத்தாக வேண்டும். பின்னர் இவ்வறிவித்தல் கொடுத்து பன்னிரண்டு நாட்களுக்கு அப்புறம்மூன்று மாதங்களுக்குள் அவ் விவாகப் பதிவுகாரரிடமிருந்துஒரு தராதரப் பத்திரம் பெற வேண்டும். அத் தராதரப் பத்திரத்திலே பதிவுகாரர் அறிவித்தலில் கொடுத்த விஷயங்களையும் அவ் விவாகத்துக் கொருவரும் தடை கொடுக்கவில்லை யெனவும் குறிப்பிடுவார்.

## தடை

இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது விவாகத்துக்கு யாருடைய சம்மதம் தேவையோ அவர் பதிவுகாரர் தராதரப் பத்திரம் கொடுக்காமல் தடை செய்யலாம். இதைவிட வேறு ஏது காரணம் பற்றியும் (உதாரணமாக ஒரு தம்பதி கலியாணமானவர் என்பது காரணமாக) எவரும் தடை (Caveat) போடலாம். அப்படித் தடை போடப்படின் பதிவுகாரர் தராதரப்பத்திரத்தைக் கொடுக்க மறுப்பதுமன்றி உடனே அந்த மாவட்ட நீதிபதிக்கு(District Judge) தடை பற்றி யறிவித்தல் கொடுக்கவும் வேண்டும்.

நீதிபதி சடுதி விசாரணை மூலம் (Summary Enquiry) விசாரித்துத் தராதரப் பத்திரம் கொடுக்க வேண்டுமோ இல்லையோ வெனத் தீர்ப்புக் கூறுவார். அத்துடன் தடை கொடுத்தவர் விஷமத்துக்கு அல்லது போதிய நியாயமின்றிக் கொடுத்தாரெனக் கண்டால் அவரின் மீது ஆயிரம் ரூபா மட்டும் அபராதம் விதிக்கலாம்.

## உடன் விவாகத்துக்கு விசேஷ அனுமதிப் பத்திரம்

பதிவுகாரர் தராதரப் பத்திரம் கொடுத்த பிறகு நடக்க வேண்டிய முறை யாதென இனி ஆராய்வோம். பதிவுகாரர் பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு தான் தராதரப் பத்திரம் சாமானியமாகக் கொடுப்பார். ஆயினும் சடுதி விவாகம் செய்ய விரும்புவர்கள் ஒரு விசேஷ கட்டணத்தை (Special Fee) கொடுத்து உடனேயே (பன்னிரண்டு நாள்கள் காத்திராமல்) மாகாண அதிபரிடம் விவாகப் பதிவுக்கு விசேஷ அனுமதிச் சீட்டைப் (Special Licence) பெறலாம். இவ் விசேஷ அனுமதிச் சீட்டைப் பெற்றால் விவாகத்தை யுடனேயே பதிவு செய்யலாம். தராதரப் பத்திரம் அல்லது விசேஷ அனுமதிச் சீட்டுக் கிடைத்தவுடன் விவாகப் பதிவு செய்ய முடியும்.

## நிபந்தனைகள்

இவ் விவாகப் பதிவு அந்தப் பதிவு காரரின் காரியாலத்தில் அல்லது ஒரு பாதிரியாரால் ஒரு பதிவு செய்யப்பட்ட தேவாலயத்தில் செய்ய முடியும் ஆனால் அது காலை ஆறு மணியிலிருந்து மாலை யாறு மணிக்கிடையில் பதிவு செய்து முடிக்கப்பட வேண்டும். இதற்கு இரு சாட்சிகள் அத்தாட்சிபண்ண வேண்டும். குறிக்கப்பட்ட இடத்தைவிட வேறு இடங்களில் பதிவு செய்ய வேண்டின் அல்லது குறிக்கப்பட்ட நேரத்துக்கு அப்பாற்பட்ட நேரத்தில் பதிவு செய்ய வேண்டின் மாகாண, உதவி மாகாண பதிவுகாரரிடம் விசேஷ அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும். மரணப் படுக்கை விவாகங்களில் மாத்திரம் மேற்படி முறைகள் அனுசரிக்கப்பட வேண்டியதில்லை.


## பதிவில் சலுகை

சாதாரணமாக விவாகப் பதிவு கச்சேரியிலோ அல்லது

(11-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே


★ ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
★ உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன் : 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

சிக்கனமானது! பிரகாசமுள்ளது!
உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு
நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:-
எஸ். ஏ. மொகமெட் ஹாஜீயார்,
70, 4ம் வீதி, கொழும்பு-12.
143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம் கண்டேன்



24

கண்ணுதற் கடவுளாம் கயிலை நாயகன் தனது அருள் நிதியை அள்ளி வழங்கியமை கண்ட காஷ்மீர அமரநாதன் தனது பங்கையும் தரத் திருவருள் கொண்டான்போலும், பாகேஸ்வரம் வாடிவீட்டில் அன்பர்களுடன் எம்பிரானின் திருவிளையாடல்களைச் சிந்தித்து, அளவளாவி ஆனந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது அமரநாத பரசிவத்தின் அழைப்பை உணர்ந்தேன். அன்றே முடிவு செய்தேன் அமரநாதனை தரிசிக்க. மறுநாள் முழுவதும் பாகேஸ்வரத்தில் நல்ல ஓய்வெடுத்துக் கொண்டு ஜுலை பத்தாம் திகதி காலை பஸ்ஸில் காத்கோடம் புறப்பட்டோம். இணைபிரியாது இருந்து பணிபுரிந்து வந்த சமையற்காரரர் திவான்சிங் விடை பெற்றுக் கொண்டார். அன்பும் நன்றியும் பெருக அவ்வமயம் எம்மிடமிருந்து தர இயன்றதையெல்லாம் அள்ளித் தந்து அவரை அனுப்பினேம்.

வழியில் மழை காரணமாகப் பெருமரம் ஒன்று சரிந்து பாதையைக் குறுக்கிட்டுக் கிடந்தது. அதை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு பஸ் கிளம்ப நெடுநேரம் கழிந்து விட்டது. இரவு நேரம் மூகிற் புகாருக்குள் மெதுவாக நகர்ந்து நகர்ந்து வண்டி ஒருவாறு காத்கோடத்தை யடைந்துவிட்டது. இரவு புகையிரத நிலையத்தில் கழிந்தது.

## நைநிதால்

மறுநாள் ஆகஸ்ட் 11. மாலை 3-45க்குத்தான் ரயில் புறப்படுமாதலால் அந்த இடைநேரத்தில் நைநிதால் அழகியகோடைவாசஸ்தலத்தைப் பார்த்து வரப் புறப்பட்டோம். அரசாங்க டாக்சியொன்று எங்களை ஏற்றிச் சென்றது. நைநிதால் ஏரியழகையும் இயற்கையின் வண்ண ஓவியங்களையும் கண்டு ரசித்தோம். ஏரியிற் சற்றே படகு விட்டோம். பகலுணவுக்கே காத்கோடம் ரயில் நிலையம் திரும்பினேம். மாலை ரயிலில் கிளம்பினேம். இரவெல்லாம் ரயிலில் நல்ல நித்திரை. அதிகாலை மதுராவை யடைந்தோம். அங்கு ஸ்ரீ சுவாமி பிரேமானந்தஜி, திரு பிரவீன் நாநாவதி, இராமதாஸ்ஜி, அதுவரை எம்முடன் வந்த வழித் துணைவர் ஸ்ரீ சுவாமி பகவதானந்தஜி ஆகிய அனைவரிடமும் பிரிய இயலாத மனத்துடன் விடை பெற்றுக்கொண்டு கிரான்ட்ரங் எக்ஸ்பிரஸில் ஏறி டெல்லிமா நகரையடைந்தேன்.

## குருக்ஷேத்திர தரிசனம்

டெல்லியில் நான்கு நாட்கள் தங்கி மேலும் அமரநாத் பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டு இந்திய பாதுகாப்பு மந்திரி காரியாலயத்தில் காஷ்மீர் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்குத் தேவையான அனுமதிச் சீட்டையும் பெற்றுக்கொண்டு ஆகஸ்ட் 16ந் திகதி பட்டான் கோட் துரித ரயிலில் புறப்பட்டேன். வழியில் குருக்ஷேத்திர தரிசனம் கிடைத்தது. இதுவே ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு ஸ்ரீமத் பகவத்கீதையை உபதேசம் செய்த இடமாகும்.

## வசிஷ்ட மகரிஷி ஆலயம்

அப்பாற் சென்று இன்று உலகப் பிரசித்தி பெற்று விளங்கும் பக்ரா நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தையும் பார்த்துக்கொண்டு பட்டான் கோட் வந்தேன். அங்கிருந்து இனிய காட்சிகள் நிறைந்த குலுப் பள்ளத்தாக்குப் பகுதிகளினூடாக மணலியை அடைந்தேன். அதனை அடுத்து வசிஷ்ட மகரிஷியின் ஆலயம் அமைந்துள்ளது. அதனருகே ஒரு வெந்நீர்க் குளமும் உண்டு. அக்குளத்தில் முழுகி வசிஷ்ட மகரிஷியின் ஆலயத்தைத் தரிசித்து மீண்டும் பட்டான் கோட் திரும்பி வந்து காஷ்மீர் நாட்டின் தலைநகராகிய ஸ்ரீநகருக்கு விசேஷ பஸ்மூலம் புறப்பட்டேன். வழியில் அனுமதிச் சீட்டுகள் சோதிக்கப்பட்டன. பகல் புறப்பட்ட பஸ் 67 மைல்களைக் கடந்து மாலை நேரம் 'ஜம்மு' என்ற இடத்தை அடைந்தது.


## ஸ்ரீ ரகுநாத் ஆலயம்

காஷ்மீரத்தின் பனிக்காலத் தலைநகர்தான் ஜம்மு. அன்றிரவு புகழ்பெற்ற ஸ்ரீரகுநாத் ஆலயத்தையும், மற்றும் பல தெய்வ சன்னதிகளையும் தரிசித்து மறுநாட் காலை மீண்டும் பஸ்ஸில் பிரயாணத்தைத் தொடர்ந்தேன். வழி முழுவதும் மிக அழகான காட்சிகள். வர்ண ஜாலங்களைப் பலப்பல வடிவங்களில் வாரி வழங்கி, இயற்கையன்னையின் திருமேனியிற் பூத்துப்பொலிந்து மணங்கமழும் மலர்வகைகள் பலகோடி; உயிர்வாழ உணவளிக்கும் கோதுமை

**சுவாமி சச்சிதானந்தா**

போன்ற பயிர் வகைகள் ஒருபுறம்; உண்ணத் தெவிட்டாத அப்பிள், மற்றும் தேமதுரத் திங்கனிகளைத் தாங்கி நிற்கும் பழந்தரு மரங்கள் மற்றோர் புறம்.

வழியில் 9,000 அடி உயரத்திலுள்ள 'பனிகல்' கணவாயில் நீண்ட சுரங்கமொன்று வந்தது. பஸ்ஸை விட்டு இறங்கிச் சுரங்கத்தினூடு நடந்து மறுபுறம் வெளியே வந்தேன். நாம் எவ்வுலகில் இருக்கின்றேம் என்ற சந்தேகம் தோன்றியது. எல்லாம் வியக்கத்தகு காட்சிகள்! வெள்ளிப் பனிக் கிரீடம் புனைந்த அழகிய சிகரங்கள் பல புடைசூழ, மத்தியில் சுமார் 80 மைல் நீளமும், 25 மைல் அகலமுமாகப் பரந்த காஷ்மீரப் பெருவெளி கட்புலனைக் கவர்ந்து, தன் வயப்படுத்தித் தனித்ததோர் இன்பத்துள் ஆழ்த்தி நின்றது. அந்நாட்டின் சர அசரங்கள் அனைத்துமே வண்ண ஓவியங்களாகத் திகழ்ந்து அன்னை பராசக்தியின் கைவண்ணத்தை மக்களுக்குக் காட்டி நிற்கின்றன. எத்திசை நோக்கினும் எல்லையற்ற எழில்!



ஸ்ரீ நகரில் உபயோகிக்கப்படும் வித விதமான ஓடங்களில் சில வற்றை இங்கு காண்க. மேலேயுள்ள படத்தில் தெரிவது வீடு போன்ற அமைப்பில் உள்ள பெரிய ஓடம். கீழே உள்ள படத்தில் அழகான சிறிய ஓடங்கள் நான்கு நிரையாக விடப்பட்டிருக்கின்றன.

## ஐயமும் அழைப்பும்

இவ்வினிய காட்சி எமக்கொரு ஐயத்தை ஆக்கியது. கடவுள் காட்சிக்காகக் கண்களைப் படைத்தானு? அல்லது கண்களுக்காகத்தான் காட்சிகளைப் படைத்தானே என்பதே அவ்வையம். ஆனல் விடையும் கூடவே வந்தது. "ஒன்றுக்காக ஒன்றல்ல இரண்டுமே அவனுக்காகத்தான் எல்லாம் அவன் உரு. எல்லாம் அவன் செயல்" இவ்வாறு சிந்தனையில் லயித்திருந்த போது, "சுவாமிஜி நீங்கள் இங்கேயே நின்றுவிட உத்தேசமா" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். பஸ் கண்டக்டரைக் கண்டேன். அப்போதுதான் சூழ்நிலையின் நினைவு வந்தது. நல்ல வேளை, அவ்விடத்திலேயே நம்மை விட்டு விட்டுப்போகாமல் கூப்பிட்ட மையை எண்ணிய நெஞ்சம் அவருக்கு நன்றிகூற கால்கள் கடுகிச் சென்று பஸ்ஸில் ஏறின.

## ஸ்ரீநகரில் சிவாலயம்

அன்று முழுவதும் பஸ் பிரயாணம். 200 மைல்களைக் கடந்து இருட்டிய நேரம் ஸ்ரீநகரில், யாத்திரிகர் வரவேற்பு விடுதியை அடைந்தோம். யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் நிறைந்த அவ்வரசாங்க விடுதிச் சிறப்பைப் பற்றி நீண்டதோர் பிரசங்கமே செய்துவிடலாம். காஷ்மீர் நாட்டின் கோடை காலத் தலைநகரமே ஸ்ரீநகர். இதன் சிகரமெனத் திகழ்வது சங்கராச்சாரிய மலை. அம்மலையின் உச்சியில் அழகியதாய் அமைந்துள்ள சிவாலயத்தில் மிகப் பெரிய அளவிலுள்ள சிவலிங்கத் திருமேனியில் இறைவன் காட்சி தருகிருர்.

## பட்டணத்தின் பேரழகு

மலை உச்சியிலிருந்து ஸ்ரீநகர்த் தாயின் அழகு முழுவதையும் ஒருங்கே பார்த்துப் பரவசமடைந்தேன். நவரத்தினப் பதக்கங்களை அணிந்த மார்பகம்போன்று அணியணியாக அமைந்த பலவர்ண மாளிகைகளைக்கொண்ட ஸ்ரீநகர்ப் பட்டணம் விளங்குகின்றது. வண்ணக் கரையிட்ட மேலாடையென்ன திரைரையாக அன்னங்களும், படகுகளும் மற்றும் மக்கள் வதியும் மாடிப் படகுகளும், அன்னப் பறவைகளும், அழகு பூந்தாமரையும், இன்னும் பற்பலவாய் எண்ணற்ற கொடி வகையும், எல்லாமாய்ச் சேர்ந்து, ஸ்ரீநகர் நங்கையது, மின்னலிடை தன்னில் மினுங்கு பூந்துகிலென்ன, பன்னப்பட வியலாப் பாங்கில் விளங்கியது. அனைத்தும் நேரில் பார்த்து அனுபவிக்க வேண்டியதன்றிச் சொல்லக் கேட்டு அனுபவிக்க முடியாத வியப்புறு வனப்புவாய்த்தவை.


## மதம்

காஷ்மீர் நாட்டில் சைவமணம் கமழுவது சமயக்கண்களுக்கு நன்கு விளங்கும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற பெருங் கருத்தை எல்லோருக்கும் எடுத்துரைப்பதுபோல மற்றும் பல மதங்கள் ஒன்றிய பாங்கில் காணப்படுகின்றன.

## பஹல்காம்

அடுத்து வரும் ஆகஸ்ட் 29ம் தேதி புதன் மாலை புனி

(15-ம் பக்கம் பார்க்க)



சங்கராச்சாரிய மலையிலிருக்கும் சிவாலயத்தை மேலேயுள்ள படத்திலும், குருக்ஷேத்திர பூமியில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு பகவத்கீதை உபதேசித்த இடத்தைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

குறைந்த செலவில்
வெண்மையான சலவைக்கு

மில்க் வைட்
நீல சோப்

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
527, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.

ஆசிரிய கலாசாலைப்
பிரவேசப் பரீட்சை 1959

இப்போட்டிப் பரீட்சையில் நீங்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியைப்பெற உங்களுக்கு வழி காட்டும் எமது புத்தகங்களை இன்றே வாங்கிப் படியுங்கள்
பாடத்திட்டம் தழுவிய புத்தகங்கள்.

★ பாஷை ★ பூமிசாஸ்திரம் ★ எண்கணிதம்
★ சரித்திரம் ★ பொதுவிவேகம்.

ஒவ்வொரு பாடப்புத்தகமும் ரூபா 12-50.
தபாற் செலவு பிரதிக்கு 35 சதம்.
கடந்தகால வினு விடைகள் ஒவ்வொரு பாடத்துக்கும்
ரூபா. 3-00 தபாற் செலவு 35 சதம்.
விபரங்களும் விலைப் பட்டியலும் இலவசம்

விபரங்களுக்கு எழுதுக:

ஆர்லஸ் ஹோல்,
723, மருதானை, கொழும்பு.
தபாற் பெட்டி 649 போன்: 9759.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1959 ஜூன் மாதம் 28-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## ஜூன் 30

ஜூன் 30-ந் தேதி இலங்கைப் பாராளுமன்றம் சற்றுப் பரபரப்பான சூழ் நிலையில் கூடவிருக்கின்றது. திரு பிலிப் குணவர்த்தனவும் அவர் தம் கோஷ்டியினரும் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின்னர் நடைபெறும் முதலாவது ஜனப் பிரதிநிதிகள் சபைக் கூட்டம் இதுவாகும்.

இந்தக் கூட்டத்தில் என்ன நடக்கும், எதிர்காலம் எப்படியான திருப்பத்தையடையும் என்பதையெல்லாம் அறியப் பொது மக்கள் தங்கள் பார்வையை முப்பதாந் தேதியின் மீது பதித்துக் காத்திருக்கிறார்கள்.

முப்பதாந் தேதி பாராளுமன்றத் திறப்பு விழாவின் போது கவர்ணர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகா நிகழ்த்தவிருக்கும் சிம்மாசனப் பிரசங்கத்தை இம்முறை எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒரு முகமாகப் பகிஷ்கரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்பு இப்படி ஒற்றுமையான பகிஷ்காரம் நிகழ்ந்ததில்லை.

தமிழரசுக் கட்சியொன்றுதான் வருடாவருடம் ஒரே நிலையாக சிம்மாசனப் பிரசங்கத்தைப் பகிஷ்கரித்து வந்திருக்கிறது. தமிழரசுக் கட்சியைப் போலவே இதர எதிர்க் கட்சிகளும் சிம்மாசனப் பிரசங்கத்தைப் பகிஷ்கரிக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பது நிச்சயமாக இன்றைய அரசாங்கத்துக்குப் பெருமை தருவதாகாது.

முப்பதாந் தேதி நடைபெறும் கூட்டத்தில் மூன்று விஷயங்கள் தெளிவாகலாம்.

1. புதிய மந்திரி சபையின் கொள்கைகள் என்ன? எதிர்கால வேலைத் திட்டங்கள் யாவை? மேன்மை தங்கிய கவர்ணர் ஜெனரலுடைய 'என் அரசாங்கம்' மக்களுக்கு அளிக்கப்போகும் வாக்குறுதிகள் எத்தகையன?—இவை சிம்மாசனப் பிரசங்கத்தில் வெளியாகும்.

2. அரசாங்கக் கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் நடைபெறும் உக்கிரமான பலப் பரீட்சையில் எந்தப் பக்கம் ஊசிவாட்டம் வாசியாகப் போகிறது என்பது வெளியாகும்.

3. இன்றைய அரசாங்கம் தொடர்ந்து இயங்குமா அன்றி விரைவில் கவிழ்ந்து விடுமா என்பதற்கான சூசகங்கள் ஒருவாறு தெரியவரும்.

யு. என். பி. ஆட்சிக் காலத்திலும் சரி, எம். ஈ. பி. பதவி யேற்றபின் கடந்த மூன்றாண்டுக் காலங்களிலும் சரி, ஒவ்வொரு தடவையும் பாராளுமன்றத் திறப்பு விழா நடக்கும் போது 'என் அரசாங்கம் இதைச் செய்யும். என் அரசாங்கம் அதைச் செய்யும். வானத்தை வில்லாய் வளைக்கும். மணலைக் கயிறாய்த் திரிக்கும்' என்றெல்லாம் இதே கவர்ணர் ஜெனரல் விளாசியிருக்கிறார் ஆனால் முடிவில் எதுவும் நடந்ததில்லை. வாழ்க்கைச் செலவு இறங்கியதில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்ததில்லை. நாட்டின் வளம் பெருகியதில்லை. தனி மனிதன் வருமானம் அதிகரித்ததில்லை! இந்த நிலையில் இம்மாதம் முப்பதாந் தேதி "முழங்கவிருக்கும்" சிம்மாசனப் பிரசங்கத்தில் எதுவும் புதுமையாக இடம் பெற்று விடும் என்று பொது மக்கள் எதிர்பார்க்கவில்லை. பழைய புளுகுகள் புதிய மெருகுடன் படைக்கப்படும் என்றே கருதுகிறார்கள்.

இன்றைய நிலையில் அரசாங்கக் கட்சி எதிர்க் கட்சி ஆகிய இரண்டின் பலமும் பெரும்பாலும் சமமாகவே இருக்கின்றது. முப்பதாந் தேதியோ அதற்கு முன்போ ஒரு சிலர் அரசாங்கக் கட்சியிலிருந்து எதிர்க் கட்சிக்கு மாறுவார்கள் என்றும், வேறு சிலர் எதிர்க் கட்சியிலிருந்து அரசாங்கக் கட்சிக்கு இடம் பெயர்வார்கள் என்றும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இன்றுள்ள கட்சிப் பலத்துடனேயே முப்பதாந் தேதிக் கூட்டம் நடைபெறுவதாக விருந்தாலும் அரசாங்கக் கட்சியில் உள்ள அங்கத்தவர்களுள் நால்வர் அன்றையக் கூட்டத்துக்கு சமுகமளிக்க முடியாதவர்களாயிருப்பார்கள். நியமன அங்கத்தவரான திரு சிங்கிள்டன் சமன் இலங்கைக்கு வெளியே சென்றுள்ளார். திருவாளர்கள் ஆர். எஸ். பெல்பொலவும், எஸ். யு. எதிர்மன்னசிங்கமும் நோய் வாய்ப்பட்டு மருத்துவ மனைகளில் படுத்திருக்கிறார்கள். திரு எம். எஸ். திஸநாயக இந்தியாவுக்கு சென்றிருக்கிறார்.

இதைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்க்கட்சிகள் ஒரே வழியில் கட்டுப்பாடாக செயற்பட்டால் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவது சாத்தியமானதே. ஆனால் அதுவும் நடக்கக்கூடிய காரியம் என்று ஸ்திரமாகச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் எதிர்க் கட்சியிலுள்ள ஒரு சிலர் எதிர்ப்புறம் உட்கார்ந்திருந்தாலும் வலப் புறமே வாக்களிப்பார்கள் என்று நம்பப்படுகிறது!

மேலும் எதிர்க்கட்சியில் உள்ள பல பிரிவினர்களுக்கு அரசாங்கத்தை உடனடியாகக் கவிழ்த்துவிட வேண்டும் என்ற ஆவலோ நோக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கம் கவிழ்ந்தால் திரும்பவும் தேர்தலுக்கு நின்றாக வேண்டுமே என்ற கவலை யாருக்குத்தான் இருக்காது?

காலங் கடக்க விடாமல் அரசாங்கத்தை உடனடியாகக் கவிழ்த்துவிட்டுப் பொதுத் தேர்தலுக்கு வழி வகுக்க வேண்டும் என்ற ஆவேசம் திரு பிலிப் குணவர்த்தன கோஷ்டியொன்றுக்குத்தான் மும்முரமாக இருக்கிறது. அப்படி இருப்பதற்கும் முகாந்திரம் உண்டு. உடனடியாக அரசாங்கம் வீழ்ச்சியடையுமானால் பிலிப் கோஷ்டி வெளியேறியதனால் தான் அரசாங்கம் ஆட்டங் கண்டது என்று பொது மக்கள் நினைக்கவும், அப்படிப் பிரசாரம் செய்யவும் இடமுண்டு. அதனால் திரு பிலிப்பின் செல்வாக்கு, அவர் ஒரு அசகாய சூரர் என்ற எண்ணம் நாட்டில் உயர்வடையும், அதிகரிக்கும்.

இதற்கு மாறாக இன்னும் இரண்டு வருடங்கள் அரசாங்கத்தை எப்படியோ இழுத்துக்கொண்டு போவதற்கு திரு பண்டாரநாயகாவுக்கு இடமளித்துவிட்டால் அப்புறம் பிலிப்பென்றால் யார்? அவர் என்ன செய்தார்?—இப்படியான விவரங்களை யெல்லாம் பொது மக்கள் மறந்து விடுவார்கள். பிலிப் செல்வாக்கிழந்தவராகி விடுவார். இந்த உண்மையை அறிந்தமையினால்தான் பிலிப் கோஷ்டியினர் அரசாங்கத்தைக் கவிழ்த்து விட வேண்டும் என்று கதறுகிறார்கள், பதறுகிறார்கள்!

இன்றைய அரசியல் சூழ்நிலை இவ்வாறுதான் அமைந்து கிடக்கிறது. இதிலிருந்து எத்தகைய திருப்பங்கள் புதுக் குழப்பங்கள், மாற்றங்கள், ஏற்றங்கள், சூழ்ச்சிகள், [illegible] நாமும் ஜூன் 30 வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

# மொத்தம் 24 பிரதிநிதிகள்
## வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு

## தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷன் அறிக்கை

தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷன் புதிய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை, எண்ணிக்கை சம்பந்தமாகவும் அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பிரதிநிதிகளின் தொகை சம்பந்தமாகவும் செய்த சிபார்சுகள் அரசாங்கத்தால் பிரத்தியேக கஸட் அறிவித்தல்மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தல் பிரகாரம் பாராளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 145 ஆகவும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை 151 ஆகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. 145 தொகுதிகளில் ஐந்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவர்.

### பல அங்கத்தவர் தொகுதிகள்

மட்டக்களப்பு, மூதூர், கொழும்பு தெற்கு, அக்குரானை ஆகிய நான்கிலிருந்தும் இவ்விரண்டு பிரதிநிதிகளும் கொழும்பு மத்திய தொகுதியிலிருந்து மூன்று பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவர். இந்த ஐந்து தொகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 11 பிரதிநிதிகளும் மற்றுமுள்ள 140 தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் 140 பிரதிநிதிகளுமாக ஆக மொத்தம் 151 பேரே புதிய பாராளுமன்றத்தில் இருப்பார்கள். நியமன அங்கத்தவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை.

### வடக்கிலும் கிழக்கிலும்

பரவலாக எல்லா மாகாணங்களிலும் தொகுதிகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாணத்தில் முன்பு இருந்த 9 தொகுதிகளுக்குப் பதிலாக இப்போது 13 தொகுதிகளும் கிழக்கு மாகாணத்தில் முன்புஇருந்த 7க்குப் பதிலாக இப்போது 9ம் இருக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தின் தொகுதிகள் 9ஆக இருந்த போதிலும் மட்டக்களப்பில் இருவரும், மூதூரில் இருவரும் ஏனைய 8லும் ஒவ்வொருவருமாக மொத்தம் 11 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

### புதிய தொகுதிகள்

வடக்கு மாகாணத்தில் நல்லூர், உடுவில், உடுப்பிட்டி, கிளிநொச்சி ஆகியன புதுத் தொகுதிகள். கிழக்கு மாகாணத்தில் நிந்தவூரும், அம்பாறையும் புதியனவாகும்.

தொகுதிகளின் விவரம் வருமாறு:- 1 கொழும்பு வடக்கு; 2 கொழும்பு மத்தி [3 ஸ்தானங்கள்] 3 பொரளை 4 கொழும்பு தெற்கு [2 ஸ்தானங்கள்]; 5 வத்தளை; 6 நீர்கொழும்பு; 7 கட்டானை; 8 திவுலபிட்டி; 9 மிரிகாமம்; 10 மினுவாங்கொடை.

11 அத்தனகலை; 12 கம்பஹா; 13 ஜாஎலை; 14 மஹாரை; 15 தொம்பே; 16 களனி 17 கொலன்னாவ; 18 கோட்டே; 19 தெஹிவளை-கல்கிசை; 20 மொரட்டுவை.

21 கெஸ்பேவா; 22 கொட்டாவா; 23 ஹோமகம; 24 அவிசாவளை; 25 ஹொரணை; 26 புலாத்சிங்கள; 27 பண்டாரகம; 28 பாணந்துறை; 29 களுத்துறை; 30 வேருவிலை.

31 மத்துகாமம்; 32 அகலவத்தை; 33 தம்பனை; 34 லாகல்ல; 35 மாத்தளை; 36 ரத்தோட்ட; 37 வத்துகாமம்; 38 அக்குரனை [2 ஸ்தானங்கள்]; 39 கலகெதர; 40 எட்டிநுவர.

41 உடநுவர; 42 கண்டி; 43 செங்கடகல; 44 குண்டசாலை; 45 தெல்தேனியா; 46 மினிப்பே; 47 வலப்பனை; 48 ஹங்குராங்கெட்ட; 49 ஹேவஹெட்ட; 50 கம்பளை

51 நாவலப்பிட்டி; 52 கொத்மலே; 53 நுரளை; 54 மஸ்கேலியா; 55 பலப்பிட்டி 56 அம்பலாங்கொடை; 57 பெந்தாரா-எல்பிட்டி; 58 ஹினித்தும; 59 பத்தேகம; 60 ரத்கமே.

61 அக்மீமன; 62 காலி; 63 ஹபராதுவா; 64 வெலிகாமம்; 65 அக்குரஸ்ஸ; 66 தெனியாய; 67 ஹக்மன; 68 கம்புருபிட்டிய; 69 மாத்தறை; 70 தேவிநுவர; 71 பெலியத்த; 72 முல்கிரிகல; 73 திஸ்ஸமாரம.

74 ஊர்காவற்றுறை; 75 வட்டுக்கோட்டை; 76 காங்கேசன்துறை; 77 உடுவில்; 78 யாழ்ப்பாணம்; 79 நல்லூர்; 80 கோப்பாய்; 81 உடுப்பிட்டி; 82 பருத்தித்துறை; 83 சாவகச்சேரி; 84 கிளிநொச்சி; 85 மன்னார்; 86 வவுனியா; 87 திருகோணமலை; 88 மூதூர் [2 ஸ்தானங்கள்]; 89 கல்குடா; 90 மட்டக்களப்பு [2 ஸ்தானங்கள்]; 91 அம்பாறை 92 பட்டிருப்பு; 93 கல்முனை; 94 நிந்தவூர்; 95 பொத்துவில்; 96 புத்தளம்.

97 நிக்கவரெட்டியா; 98 யாப்பாஹுவா; 99 ஹிரியால; 100 வாரியப்பொளை 101 பிங்கிரியா; 102 சிலாபம்; 103 நாத்தாண்டி; 104 வென்னப்புவ; 105 கட்டுகம்பொளை; 106 குளியாப்பிட்டி; 107 தம்பதேனியா; 108 பொல்காவலை; 109 குருநாகல்; 110 மாவட்டகம.

111 தொடங்கஸ்லந்தை; 112 அனுராதபுரம்; 113 மதவாச்சி; 114 ஹொரவபௌத்தன; 115 மிஹிந்தலை; 116 கலாவேவ; 117 கெக்கிராவை; 118 மின்னேரிய; 119 பொலன்னறுவை; 120 மஹியங்கனை.

121 பிபிலை; 122 பஸ்ஸறை; 123 பதுளை; 124 சரணதோட்டை; 125 ஊவா பரணகம; 126 வெளிமடை; 127 பண்டாரவளை; 128 அப்புத்தளை; 129 மொனராகலை; 130 டெடிகம.

131 கலிகமுவ; 132 கேகாலை; 133 ரம்புக்கனை; 134 மாவனல்ல; 135 எட்டியாந்தோட்டை; 136 ருவான்வெல; 137 தெஹியோவிட்ட; 138 கிரியல்ல; 139 ரத்தினபுரி; 140 பெல்மதுல்ல.

141 பலாங்கொடை; 142 ரக்வான; 143 நிவிட்டிகல; 144 கலாவான; 145 கொலன்னா.

### கடமை முடியவில்லை

தொகுதி எல்லை நிர்ணயம் சம்பந்தமாக இந்த மாற்றங்களை யெல்லாம் செய்து கஸட் மூலம் அறிவித்துவிட்டதோடு அரசாங்கத்தின் கடமை முடிந்துவிடவில்லை. மக்கள் எளிதாக அந்த விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் செயலாற்ற வேண்டும். வாக்காளர்களுக்கும் உத்தேச அபேட்சகர்களுக்கும் தாம் எந்தெந்தத் தொகுதிகளில் உள்ளோம் என்பதும் தமது தொகுதிகளின் திட்டவட்டமான எல்லைகளும் தெரிந்துகொள்ள வசதியளிக்குமுகமாக தபாற்கந்தோர்களில், கச்சேரிகளில், கிராமத் தலைவர்கள் காரியாலயங்களில் விவரங்களடங்கிய பட்டியல்கள் இலகுவில் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

### வாக்காளர்கள் இடாப்புகள்

இன்னுமொரு முக்கியமான விஷயம். தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிப்பது எவ்வளவு முக்கியமோ அப்படியே வாக்காளர்களைப் பதிவு செய்து கொள்வதும் முக்கியமானதாகும்.

நடைமுறையில் இருக்கும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அதன் பின்னர் 4 மாதங்களுக்குள் அடுத்த பாராளுமன்றத் தேர்தல்கள் நடக்கவேண்டுமென்று கூறுகிறது இலங்கை அரசியல் சட்டம். ஆகவே காலந்தாழ்த்தாமல் வாக்காளர்கள் இடாப்புகளைத் தயாரிக்கும் வேலையும் தொடங்கப்பட வேண்டும். வாக்காளர்கள் இடாப்புகள் அந்தந்த மொழி பேசும் மக்களுக்குப் புரியும்படி பிரதேசத்துக்

(13-ம் பக்கம் பார்க்க)

## முதலிக் குளப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மே மாதம் நடைபெற்ற காணிக் கச்சேரியின்போது தெரிவு செய்யப்பட்ட சுமார் 250 தமிழ்க் குடும்பங்களுக்குரிய காணிகள் ஒதுக்கப்பட்டு இம்மாதம் 15, 16, 17ந் தேதிகளில் குடும்பத் தலைவர்கள் ஸ்தலத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்கள் வசம் காணிகள் பொறுப்புக் கொடுக்கப்பட்டன.

### இன்னும் இடமுண்டு

ஏற்கனவே சுமார் 150 தமிழ்க் குடும்பங்கள் முதலிக்குளத்தில் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இப்போது 250 குடும்பங்கள் குடியேற்றப்படுகிறார்கள். இன்னும் 50 குடும்பங்கள்வரை குடியேற்ற இடமுண்டு என்று தெரிகிறது.

தமிழரசுக் கட்சியின் கண் அயராத முயற்சியினால் முதலிக்குளப் பிரதேசம் 90 வீதம் தமிழ் மக்களுக்கெனப் பாதுகாக்கப்பட்டுவிட்டது. 450 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்படுகிறார்கள். இது கட்சியின் ஒரு அரும்பெரும் சாதனையென்றே கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசாங்கப் பணத்தை அள்ளி வீசி பிரதமர் பிரச்னைகளைத் தீர்க்கிறார்

## அப்படி நம்மை ஏன் செய்யவிடக்கூடாது?" பஸ் மந்திரி சரத் விஜயசிங்கா கேள்வி

(சுதந்திரன் நிருபர்)

பிரதமர் பண்டாரநாயகா பஸ் தொழிலாளர்கள் பிரச்னைகளைத் தீர்க்கக் கையாளும் முறை குறித்து தேசிய சேவைகள் மந்திரி திரு சரத் விஜயசிங்கா பிரதமர்மீது மிகுந்த ஆத்திரமும் அதிருப்தியும் அடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

தொழிலாளர்கள் எந்த ஒரு காரணத்துக்காக வேலை நிறுத்தம் செய்வதானாலும் பிரதமர் தலையிட்டுப் பெரும்பாலும் சமரஸம் செய்து விடுகிறார். அரசாங்கப்பணத்தைத் தண்ணிபோல அள்ளி வீசுவதன்மூலம் தொழிலாளர்களை அவர் சாந்தப்படுத்திவிடுகிறார்.

குறிப்பாக சமீபத்தில் பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது பிரதமர் அதில் தலையிட்டு அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கச் சம்மதம் தெரிவித்து நிலைமையைச் சமாளித்தார். இப்போதே நஷ்டத்தில் நடக்கும் பஸ் சேவையில் இந்தப் புதிய ஏற்பாட்டால் மாதமொன்றுக்கு மேலும் 5 லட்ச ரூபா செலவு ஆகும். அதாவது வருஷம் ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் காலியாகும்.

இப்படி அரசாங்கப் பணத்தைச் செலவு செய்துதான் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் அதற்குப் பிரதமர் வேண்டியதில்லையே. சம்பந்தப்பட்ட மந்திரிகளிடம் ஒரு வார்த்தை சொன்னால் விஷயம் நொடிப் பொழுதில் நடைபெறாதா? அரசாங்கப் பணச் செலவில் பிரதமர் பெருமை தேடப் பார்க்கிறார். அதேநேரத்தில் மந்திரிகள் கையாலாகாதவர்கள் என்று எல்லோரும் எண்ணும்படியாகிவிடுகிறது. மானம் பறிபோகிறது—இதுதான் திரு சரத்தின் மனக்குறை என்றும் அவர் பிரதமர்மீது கொண்டுள்ள அதிருப்திக்கும் ஆத்திரத்துக்கும் மூலகாரணம் என்றும் சொல்லப்படுகிறது.

## இந்திய வம்சாவழித் தமிழன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் பிரஸாத் அந்த விருந்தில் இந்தியா தற்போது நாட்டின் முன்னேற்றத்துக்காக எந்த வகையில் உழைத்து வருகிறது என்பதை விளக்கிவிட்டு இந்திய சமூகத்தினர் தாம் வாழ்ந்து வரும் நாட்டுக்குச் செய்யும் தொண்டுதான் அவர்கள் தம் தாய்நாட்டுக்குச் செய்யும் தொண்டு ஆகும் என்றார். இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட நெடுங் காலமாக இருந்துவரும் தொடர்பையும் நேசப் பான்மையையும் நல்லெண்ணத்தையும் வலுப்படுத்தும் வகையில் இந்திய சமூகத்தினர் தாம் பிழைக்கும் நாட்டில் உழைக்க வேண்டும் என்று சொன்னார்.

### பிரதமர் பேச்சும் சந்தேகமும்

அதே விருந்தில் பின்னால் பேசிய பிரதமர் பண்டாரநாயகா ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு செவி மடுத்து அதன்படி இந்திய சமூகத்தினர் ஒழுக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதில் ஒரு சந்தேகம்!

இலங்கையிலுள்ள இந்திய சமூகத்தினர் இன்று இலங்கைக்குத் தம்மாலான மட்டில் உழைக்கவில்லையா? காடும் புதருமாயிருந்த மலைநாட்டில் இன்று வளம் கொழிக்கிறது என்றால் அது மீனாட்சிகளும் ராமசாமிகளும் தமது இரத்தத்தையெல்லாம் வியர்வையாகக் கொட்டி மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்ததன் பலன் தானே!

மலைநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள இந்திய வம்சாவளியினரும் வர்த்தகத்துறையில் எத்துணை கேந்திர ஸ்தானத்தை வகித்து வருகிறார்கள் என்பது ஜனாதிபதி பிரஸாத்துக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம். ஆனால் பிரதமர் பண்டாரநாயகாவுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை.

### அறியாமையா? நடிப்பா?

இனி, இரு தேசங்களின் நல்லுறவையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் நிலைபெறச் செய்ய எந்தச் சந்தர்ப்பத்திலாவது இந்திய சமூதாயத்தினர் தயங்கியது உண்டா? கிடையவே கிடையாது. அப்படியிருக்க அவர்களுக்குப் புதிதாக வேண்டுகோள் விடுப்பது அவர்களுடைய நிலைமையைச் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை என்பதையோ அல்லது தெரிந்தும் தெரியாதவர் போல் நடித்தார் என்பதையோதான் குறிக்கும்.

பிரதமர் பண்டாரநாயகா விருந்தில் டாக்டர் பிரஸாத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு நம்பிக்கை தெரிவித்தார். டாக்டர் பிரஸாத் தாயகம் திரும்பும்போது இந்த நாட்டைப் பற்றிய நல்ல நினைவுகளோடு இன்ப அனுபவங்களோடு திரும்புவார் என்று தாம் நம்புவதாகக் கூறினார்.

### தோட்டங்கள் சிங்களமயம்

மலைநாட்டுத் தோட்டங்களிலே பரம்பரை பரம்பரையாக வேலை செய்து பிழைக்கும் இந்திய வம்சாவழித் தமிழரின் வேலை வசதிகள் மறுக்கப்பட்டு வருகின்றன. முழுக்க முழுக்க அவர்களின் உழைப்பால் பயன்தரும் பகுதிகளாக மாறிய தோட்டங்களில் இனிமேல் அவர்களுக்குப் பதிலாகச் சிங்களத் தொழிலாளர்கள் தான் அமர்த்தப்படுவார்களாம். முதலில் இந்திய வம்சாவழித் தமிழர் இருக்கும் அளவுக்குச் சரிக்குச்சரி இலங்கை (சிங்கள) தொழிலாளர்களை நியமிக்கவும் காலக்கிரமத்தில் இந்திய வம்சாவழித் தமிழர்களை உதைத்துத் தள்ளிவிட்டு முற்றாக இலங்கை (சிங்கள) தொழிலாளர்களை நியமிக்கவும் திட்டமிட்டுக் காரியமாற்றி வருகிறார்கள்.

### தமிழருக்கு வேலை மறுப்பு

இதன் பிரகாரம் இப்போது 16 வயதுக்கு மேற்பட்ட தோட்டத் தமிழ்ப் பிள்ளைகளை அந்தந்தத் தோட்டங்களில் பதிவு செய்து கொள்ளவும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவும் மறுக்கிறார்கள்.

### கல்வி வசதி இல்லை

மலைநாட்டுத் தோட்டங்களிலே வசிக்கும் மக்கள் இந்தியா சென்று திரும்ப வசதி இல்லை. அவர்களின் பிள்ளைகள் வேண்டிய அளவு கல்வி அறிவு பெற வசதி இல்லை. போதிய பள்ளிக்கூடங்கள் இல்லை. இருக்கும் ஒரு சில அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும் இப்போது பெருந்தொகையான பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

### சுகாதார வசதி இல்லை

சுகாதார வசதிகள் அவர்களுக்கு இல்லையென்றே சொல்லி விடலாம். அவ்வளவு மோசம்! தோட்டங்களில் உள்ள சுகாதாரச் சீர்கேட்டுக்கு அத்தாட்சியாகக் கடந்த சில வருடங்களாக அங்கு சிசு மரணங்கள் அதிகரித்து வருகின்றன. அரசாங்கமே இந்த விவரத்தை வெளியிட்டு இருக்கிறது.

### பிரஜா உரிமை வழங்க மறுப்பு

எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய வம்சாவழித் தமிழருக்கு பிரஜா உரிமை வழங்குவது சம்பந்தமாகக் கொடுமைக்கு மேல் கொடுமை இழைக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள சுமார் 10 லட்சம் இந்திய வம்சாவழித் தமிழரில் சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கோ 50 ஆயிரம் பேருக்கோதான் இதுவரை பிரஜா உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கானோரின் பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நிராகரிக்கப்பட்ட மனுக்கள் சம்பந்தமாக நீதிமன்றங்களில் அப்பீல்கள் தாக்கல் செய்யப்பட்டதில் பலர் பிரஜா உரிமை பெறுவதற்கு யோக்கியதை உடையவர்களே என்றும் அவர்களின் மனுக்கள் அநியாயமாக நிராகரிக்கப்பட்டுவிட்டன என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே. அரசாங்கத்தின் மனோபாவம் இங்கே பளிச்சிடுகிறது.

### அக்கிரமம்

திடீர் திடீர் என்று பலர் "கள்ளத் தோணி"கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். வாச கால பர்மிட் பெறுவதற்கு யோக்கியதை உடையவர்கள் கூட அதற்குப் பகீரதப் பிரயத்தனம் எடுக்க வேண்டியிருக்கிறது. மேற்படி பர்மிட் வழங்குவதற்கான விசாரணைக்கென்று அரசாங்க அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டுப் பலர் தந்திரமாகக் கைது செய்து செல்களில் போட்டு வாட்டி வதைக்கப்பட்ட பின்னர் திருப்பி அனுப்பப்பட்டு விடுகிறார்கள் இந்தியாவுக்கு—இதுதான் இன்று

(11-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. ச...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு நல்ல பஸ்களாக இம் மாதம் 5 பஸ்களும் அடுத்த மாதம் 10 பஸ்களும் மூன்றாம் மாதத்திலிருந்து மாதாமாதம் 15 பஸ்களுமாக அனுப்பிவைக்க திரு மெல் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதே பிரகாரம் மட்டக்களப்புக்கு இம் மாதம் 3 பஸ்களும் அடுத்த மாதம் 5 பஸ்களும் மூன்றாம் மாதம் முதல் மாதாமாதம் 10 பஸ்கள் விதமுமாக அனுப்பப்படும் என்று தெரிகிறது.

மொத்தம் 115 திருத்தப்பட்ட நல்ல பஸ்கள் விரைவில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குப் போய்ச் சேரவிருக்கின்றன.

## நாட்டைக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு இராணுவ வீரர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

### வெளியேறியவர் வேலை

சமீபத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய ஒரு அமைச்சர்தான் தமது ஏஜண்டுகள் மூலம் இராணுவ வீரர்களிடையே இப்படியான அதிருப்தியைக் கிளறி வருவதாகவும், 'இராணுவ வீரர்கள் மூட்டை சுமக்க முடியாது' என்ற ஒரு எழுச்சியை ஊக்குவித்து வருவதாகவும் அரசாங்கம் ஐயுறவு கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.


பவுண் மார்க்

கலிக்கட்

கூரை

ஓடுகள்

கைவசம் உள்ளது

★

விபரங்களுக்கு:

ஜபர்ஜி பிரதர்ஸ்,

161, குமார வீதி,

போன் : 78501 — புறக்கோட்டை.

அல்லது

உப விநியோகஸ்தர்கள்:

B. H. G. டி சில்வா,

மொடன்டுவ



சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக!-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் விஜயம்!

சிறுகதை — எழுதியவர்: இளம்பூரணன்

"சம்போ மஹாதேவா" கடவுள் சந்நிதியின் வாசற்படியருகில் இந்தக் குரலைக் கேட்டதும், சிவபெருமானோடு அமர்ந்து ஆனந்தமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த பார்வதிக்கு முகம் சுளித்தது. சிவபூசை நேரத்தில் கரடியா? மெல்லஎழுந்து நாசுக்காக உள்ளே நழுவினுர்.

"சம்போ மஹாதேவா"

வாரும், எங்கே நெடுநாளைக்குப் பிறகு?" என்ருர் சிவபெருமான் புன் சிரிப்புடன்.

உச்சியிலே உயர்ந்து நின்ற குடுமி. கையிலே, கழுத்திலே எல்லாம் உத்திராட்சம் மாலைகள். மேனியைப் பார்த்தால் அடங்கலும் தூய பால் வெண்ணீற்றுப் பூச்சாக இருந்தது. இன்னும் தமக்கே உரிய அத்தனை லட்சணங்களுடனும் எம்பெருமான் முன் வந்து நின்ருர் பழம் பெரும் நாரதர்.

யார் யாருக்கு எல்லாம் போதாத காலமோ' என்று மனத்துக்குள் எண்ணினுர் சிவபெருமான். வெளிக்கு மட்டும், "நீர் தான் வெறுமனே வருவது கிடையாதே! ஏது விஷயம்?" என்றுகேட்டு வைத்தார்.

"பிரபு, இன்று சொல்ல வந்தது மிக முக்கியமான சங்கதி முன்பெல்லாம் உங்களை இங்கே காண்பது அத்திபூத்தாற் போல இருந்தது. சுந்தரன், நாவுக்கரசன், சம்பந்தன் முதலிய அறுபத்து மூவரில் யார் சிறிது அனுங்கினுலும் உடனே உள்ள வேலையையும் அப்படியே போட்டு விட்டுப் பூலோகத்துக்குக் கிளம்பி விடுவீர்கள். இப்போது என்னடா வென்ருல் அங்கே ஆயிரம் ஆயிரமாக உள்ள பக்தர்கள் உங்களைக் கூவிப் புலம்பி மாய்ந்தாலும் நீங்கள் அசைவதே இல்லை"

இறைவன் மென் முறுவல் பூத்தார்.

"அதனுல் அங்கு நாஸ்திகம் விஷ வேகத்தில் வளருகிறது. கடவுள் இல்லை என்கிறவனைச் சீர்திருத்தவாதி என்று கொண்டாடுகிருர்கள். எங்கும் போட்டி பொருமை, வஞ்சகம்—அஞ்ஞானத்தின் தலைவிரி ஆட்டக் கோலம்! பூலோகம் பூலோகமாகவே இல்லை தேவா!"

"அடடா, நாம் சற்று அசட்டையாக இருந்து விட்டதற்காக இப்படி ஏறுமாருகி விட்டதா?"

"ஆமாம் பிரபு, நாம் இன்னும் வாளாவிருந்தால்......"

"அது கூடாது. சகல ஆத்மாக்களையும் ஈடேற்ற இருக்கும் நாம் இன்னும் கைகட்டி நிற்பதா? ஆமாம் நாரதரே, அதற்கு மாற்ருக உமக்கு என்ன வழி தோன்றுகிறது? சொல்லும் பார்க்கலாம்."

"நாம் புண்ணியாத்மாக்களான மெய்ப் பக்தர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும். அதை உணர்ந்து மற்றவர்களும் திருந்திக் கடைத்தேறும்படியாக இருக்க வேண்டும், இல்லையா பிரபு?"

"முக்காலும் சரி."

"அதற்கு இது ஏற்ற சமயம் என்று நான் நினைக்கிறேன். பூலோகத்திலேயுள்ள இலங்கை தேசத்திலேயாழ்ப்பாணம் என்று ஒரு பகுதி இருக்கிறதல்லவா? அங்கே இப்போது பக்தி பெருக்கெடுத்து ஓடும் காலம். எங்கே பார்த்தாலும் திருவிழாக்களாய் இருக்கும். அங்குள்ள விவசாயிகளையும் உழைப்பாளிகளையும் பற்றி நீங்கள் தெரிந்திருக்கிறீர்களோ என்னவோ? பக்திமான்கள் அவர்கள்! வயிற்றை வாயைக் கட்டிச் சேர்க்கும் செல்வத்தை எல்லாம் அள்ளி வீசுகிற அவர்களின் தாராள குணத்தைப் பார்க்க வேண்டுமே!"

"என்ன!"

"ஆமாம், எல்லாம் அந்தத் திருவிழாக்களுக்காக அப்பேர்ப்பட்ட பக்தி மகத்துவம். மனைவி மக்கள், மீதி மிச்சம் என்ற சுயநல எண்ணங்களைக் களைந்து அவர்கள் வளர்க்கும் அந்த உன்னத பக்தி நெறிக்கு உதவி செய்து உரமிட்டால் நிச்சயம் பூவுலகத்தில் பழையபடி மெய்ஞானம் தழைத்து ஓங்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்."

"சபாஷ்! முதல் தரமான அபிப்பிராயம்!"

கடவுள் தெய்வலோகத்திலிருந்து இடப வாகனத்திலே புறப்பட்டார். பூலோகத்தை அண்மி அவர் இலங்கை தேசத்தைத் துருவிப் பிடித்தது சுலபத்தில் முடிந்து விட்டது. பிறகு ககன மார்க்கமாக யாழ்ப்பாணத்தை அடைந்தார். அப்போது நள்ளிரவு நேரம்!

"டிங்கிரி டிங்காலே மீனுட்சி,
டிங்கிரி டிங்காலே"

எங்கோ கீழேயிருந்து கிளம்பிள பாட்டோசை க்ஷீணமாக ஒலிக்கவே குனிந்து பார்த்தார். அடேயப்பா, எவ்வளவு சனத்திரள்! அது ஒரு மாளிகை போலும்! எழில் குலவும் திருவிடங்களான அமராவதி, அழகாபுரி எல்லாம் கூடத் தோற்றுவிடும். அலங்கார ஜோடனைகள் அப்படிக் கண்ணைப் பறித்தன. பல்லாயிரக் கணக்கான விளக்குகள் பளிச்சென்று சிரிக்க, தேஜோமயமாகக் காட்சியளிக்கும் அந்த மாளிகையை உற்றுக் கவனித்தார் கடவுள். அட, அது இறைவன் கோயிலல்லவா!

அர்த்த ராத்திரியிலும் விழித்திருக்கும் மக்களின் பக்தி மேம்பாட்டை எண்ணி வியந்து கொண்டே, கடவுள் எருதைக் கீழ் நோக்கி ஏவிவிட்டார். தரையில் அவர் கால் வைத்தபோது யாரும் அவரைக் காணவில்லை. அருவமாக நின்ருர்.

முதலில், புனிதத்துக்கு இடமான அந்தத் தெய்வம் உறையும் கோயிலில் இறைவன் இறங்கிய இடமே செப்பமாக இல்லை. சிறு நீர் நாற்றமும் வெற்றிலைச் சாற்றுத் துப்பலுமாக ஒரே அசுத்தம். இது தெய்வம் வலம் வருகிற வீதியா?

ஆண்டவன் சற்றும் சுணங்காமல் கோயில் முன்றிலுக்கு விரைந்தார். அங்கே விழி பிதுங்கும் கூட்டம். எள் போட்டால் எண்ணெய் ஆகிவிடும். "என் மேலே ஆசை கொள்ளும் ஆண்களும் கோடி தான்" என்று கூட்டத்தின் நடுவே இருந்து மிடுக்காக வந்த மென் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுப்போய் எட்டிப்பார்த்தார் கடவுள். பூச்சு, மினுக்கோடு உடலைக் குலுக்கிக் கையைக் காலை ஆட்டிக் கொண்டிருந்த வாலைக் குமரிகள் இருவர் கண்ணில் பட்டனர். இதெல்லாம் என்ன? இதுவும் தெய்வப் பணியோ?

"என்ன மாதிரி உடம்பை நெளிக்கிருள், பார்...ஆஹா ...ஹா...சோக்கான பொம்பிளை!"—இப்படி ஒரு பக்தர் பரவசமானுர்.

பல்லைக் கடித்த கடவுள் அப்பால் நகர்ந்தார். உடனே தாம் வந்த நோக்கம் ஞாபகம் வந்தது. எல்லோரையும் தூயவர்கள் என்று கணக்குப் போடுவது உசிதமாகப் படவில்லை 'சோக்கான பொம்பிளை' என்ற பிரகிருதியைப் போல என்னும் எத்தனை சிகாமணிகளோ? எனவே ஆராய்ந்து பார்க்க முற்பட்டார்.

வாயில் ஈ நுழைவது தெரியாமல் அங்கு நின்ற ஆண் மக்கள் அத்தனை பேரின் மன அந்தரங்கத்திலும் சுத்த சிந்தை, பக்தி—இவை அணுவளவுதானும் இல்லை. பதிலாக இருட்டுக்கு கை போல் அந்த[illegible] நிறைந்து [illegible] சேற்றுப் புழுக்கள் என சாக்கடை உணர்வுகள் நெளிந்தன. ஆனாலும் கடவுள் நம்பிக்கை இழக்கவில்லை. ஒதுக்குப் புறமாக இருக்கும்பெண்களாவது பக்தியைப் பாதுகாக்காமலா போகப் போகிருர்கள்? ஆனுல்—

மற்றவர்கள் தமது தங்க நகைகளையும், ஆடம்பர ஆடைகளையும் கவனிப்பதைக் கண்டு கர்வத்தில் மிதப்பதில் பலரும், ஆண்கள் பகுதியில் திருட்டுத் தனமாகக் கண்களை அலை விசவிடுவதில் சிலரும், கும்பகர்ணப் படலம் வாசிப்பதில் சொற்ப பேருமாக அவர்கள் இருந்தனரே தவிர அப்பனைப் பற்றிய கரிசனையோடு அங்கு ஒரு ஆத்மாதானும் இருந்ததாகத் தெரியவில்லை.

பொறுமையைக் கைவிடாமல் கடவுள் தமது கடைசி நம்பிக்கையையும் பரீட்சித்துப்பார்க்கச் சித்தங் கொண்டார். அருவருப்பான வாழ்க்கை நடத்தும் அந்த அலங்கார ரூபிணிகளும், மனம் பண்படாத மற்ற ஆடவ பெண்டிரும் இந்த விழாவை மாசு படுத்தினுலும் இதை ஏற்பாடு செய்த அந்த அப்பாவிகள், கண்ணப்பனைப் போல மெய்ப் பக்தர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்களை நாடிச் சென்ருர்.

அந்தோ! ஏமாந்தார். அவர்களை அவர் காணவில்லை. மது அரக்கனின் பல உருவங்களைக் கண்டார். ஒரு ஏமாற்றமா? இரண்டு ஏமாற்றமா? நாரதர் விஷமத்தினுல், நம்பிய அத்தனையிலுமே ஏமாற்றம்!

"யோசிக்காமல் பேசாதேயுங் காணும். வருஷம் முழுவதும் பாடுபடுகிற மக்களுக்கு-காசுச் செலவானுலும் இது ஓர் ஆனந்தமான பொழுது போக்கு" என்று ஒரு திருவிழா தாசர் இன்னெருத்தரைச் சமாதானப் படுத்தியது கடவுள் காதிலும் விழுந்தது.

"கடைத்தரமான ஆனந்தத்துக்கு நானு கருவி?" என்று ஆண்டவன் முழங்கினுர். கடமுடா என்று மேகம் இடித்தது போல் இருந்தது. கண்கள் இவுழி வத்தன. நெஞ்சம் விம்மி விம்மித் தாழ்ந்தது. சுற்றிலும் நின்ற பூத கணங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கி ஒடுங்கின. சீற்றம் பொங்கிச் சீறவே வெறியோடு கோயிலின் பக்கம் திரும்பினுர் கடவுள். அவ்வளவு தான், படீரென்று நெற்றிக் கண் திறந்தது. பறந்தது அக்கினிப் பொறி! இவ்வளவு அக்கிரமங்களுக்கும் நிலைக்களனு கோயில் திபுதிபுவென்று பற்றி எரிந்தது.

"வாணம்விழுந்துவிட்டது! கோயிலிலே வாணம் விழுந்து விட்டது!!"-அலறிக் கொண்டே மக்கள் அங்கும் இங்கும் ஓடினர். கூக்குரலும் அழுகுரலும், ஓலமும் ஊளையுமாக ஒரே அல்லோலகல்லோலம்.

"ஐயோ, கடவுளே! கடவுளே காப்பாற்று!"

உண்மைப் பக்தர்களைத் தேடிக் கொண்டு நாட்டுக்குள்ளே புகுந்து விட்டார் கடவுள்.


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.



உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,
லிமிடெட்,
கொழும்பு.


# "செயலாளரின் சூழ்ச்சி....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரன் நிருபருக்கு வெளியிட்டவரின் மதி மதுவினுல் மங்கியிருந்திருக்க வேண்டும் என்றும் நினைக்கிறேன்.

## தியாகராஜாவின் சூழ்ச்சி

யான் சங்கத்தில் முக்கிய பதவியில் இருந்தால் பொதுச் செயலாளர் திரு தியாகராஜாவின் சூழ்ச்சிகள் அம்பலமாகிவிடும் என்று பயந்து எப்பதவிக்கும் யான் தெரியப்படாது தடுக்க அவர் சூழ்ச்சி செய்தார். அவர் எடுத்த முயற்சிகள் படுதோல்வியடைந்து, யான் முதலாவது உபதலைவராகத் தெரியப்பட்டதைக் கண்டு பொருமைகொண்ட அவர் பத்திரிகைகளுக்கு அனுப்பிய உத்தியோகஸ்தர் விவரத்தில் யான் மூன்ருவது உபதலைவராய் தெரியப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆகவே உண்மையான உத்தியோகஸ்தர் தெரிவு விவரத்தை யான் சுதந்திரனுக்கு அனுப்பினேன். சுதந்திரனும் உண்மையற்ற உத்தியோகஸ்தர் தெரிவுவிவரத்தைவெளியிட்டுவிட்டு அதனடியில் யான் விவரம் அனுப்பியுள்ளதாய் ஆசிரியர் குறிப்புமிட்டது யானே பிழையான விவரம் கொடுத்தேன் என மற்ருேர் தப்பபிப்பிராயம் கொள்ள இடமேற்படுத்திவிட்டது.

## குழப்பம் ஏன் ஏற்பட்டது?

10-4-59ல் திருமலைக் கூட்டம் குழப்பத்திலும் 6-6-59ல் கொழும்புக் கூட்டம் பரபரப்பான சூழ்நிலையில் குழம்பிக் குழம்பியும் நடந்ததென்று சுதந்திரன் செய்தியில் காணப்பட்டது. 28-2-59ல் கூடிய பொது நிர்வாக சபையின் ஏகோபித்த தீர்மானத்தை மீறிச் செயவாற்றும்படி கிளைச் செயலாளர்களையும் சில அங்கத்தவர்களையும் பொதுச் செயலாளர் தூண்டியமையாலேயே திருமலையில் குழப்பமேற்பட்டது.

## வெற்றி நிலைக்குமா?

9-5-59ல் பொது நிர்வாக சபை ஏகமனதாய் தீர்மானித்தபடி பொதுச் செயலாளர் 30-5-59ல் பொதுச் சபையைக் கூட்டாமல், 6-6-59ல் ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை இருப்பதால் அன்று கூட்டம் கூட்டக்கூடாது என்று பொது நிர்வாக சபை 9-5-59ல் ஏகமனதாய் தீர்மானித்திருந்தும், அதை மீறிச் சர்வாதிகாரப்போக்கில் 6-6-59ல் சூழ்ச்சியாகக் கூட்டத்தைக் கூட்டி அனேகருக்கு அழைப்பை அனுப்பாமல், அதனுல் கிட்டத்தட்ட அரைவாசிப் பிரதிநிதிகள் வர முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, சுதந்திரன் செய்தியில் குறிப்பிடப்பட்டதுபோல்வெற்றி வெற்றியென்று வீறுநடை நடந்துவிட்டால், சூழ்ச்சியால் வந்த வெற்றி நிலையான வெற்றியாய்விடுமோ?

திரு தியாகராஜாவுக்கு ஆதரவு இருந்திருப்பின் சூழ்ச்சியான திகதியில் கூட்டம் கூட்டிச் சூழ்ச்சியான முறையில் அழைப்புகளை அனுப்பவேண்டியதில்லையே!

— ஆ. க. சுப்பிரமணியம்

[குறிப்பு:

செய்தி திரட்டித் தந்த நமது நிருபரிடம் மேற்படி மறுப்புக் கடிதத்தைக் காட்டி விளக்கம் கோரிய பொழுது அவர் பின்வருமாறு கூறினுர்:-

"நாம் இதற்கு விளக்கம் தருவதைவிடச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தருவதே நிலைமையைத் தெளிவுபடுத்தப் பெரிதும் பயன்படும். சுதந்திரன் செய்தி கற்பனையல்ல; கட்டுக்கதையல்ல; செவியேறல் அல்ல; நடந்த விஷயத்தின் அப்பட்டமான படப்பிடிப்பு என்பதும் அப்போது நிலைநாட்டப்படும்"

—ஆசிரியர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகச் சட்டம் (2)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுகாரரின் காரியாலயத்திலோ நடைபெறும். ஆனால் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பை யனுசரித்து, மணப்பெண் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவளாயிருந்தால் ஒரு விசேஷக் கட்டணம் கொடுத்து விவாகப் பதிவைப் பெண் வீட்டிலேயே வைத்துக் கொள்வதற்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

### பதிவுகாரர் நடத்திவைக்கும் சடங்கு

விவாகப் பதிவுகாரர் விவாகத்தைப் பதிவு செய்யும் நேரத்தில் செய்ய வேண்டிய சடங்கு வருமாறு: சாட்சிகள் முன்னிலையில் அவர் இரு தம்பதிகளையும் நோக்கி ஒரு விளக்கம் கொடுப்பார். அதாவது, "நீவிர் பகிரங்கமாக புருஷன் மனைவி யென ஏற்கப்பட்ட படியாலும், புருஷன் மனைவியென நீவிர் பதிவு புத்தகத்தில் ஒப்பமிடுகிறபடியாலும், வேறு மதச் சடங்குகளின்றி இன்று நீவிர் இருவரும் விவாகத் தம்பதிகளாகிறீர்கள். இவ் விவாகம் உங்கள் சீவிய பரியந்தம் நீதிமன்றத்தாலன்றி வேறு முறைகளால் தள்ளுபடியாகாதென்றும், அப்படித் தள்ளுபடியாகாமலிருக்கும் சந்தர்ப்பத்தில் உங்களில் ஒருவரின் சீவிய காலத்தில் மற்றவர் மறு விவாகம் செய்தால் அப்படிச் செய்தவர் பல தாரக் குற்றத்துக்கு ஆளாக நேரிடும் என்பதை அறிந்துகொள்வீராக" என்று சொல்லுவார்.

### தம்பதிகள் ஒருவருக்கொருவர் சொல்வது

இது முடிந்தவுடன் இருவரும் கீழ்க்கண்டபடி அத்தாட்சி பண்ண வேண்டும். "………எனப்படும் எனக்கும் என் முன்னிலையிலிருக்கும்………க்கும் விவாகம் நடப்பதற்கு ஒரு தடையுமில்லையென அத்தாட்சிப்படுத்துகிறேன்." இருவரும் இப்படி அத்தாட்சிப்பண்ணியவுடன் ஒருவரையொருவர் பார்த்துப் பின்வருமாறு கூற வேண்டும். "………ஆகிய நான்………ஆகிய உம்மை மனைவியாக (அல்லது புருஷனை) இங்கு குழுமியிருப்போர் எல்லோரின் சமூகத்திலும் ஏற்றுக்கொண்டேன். இதற்கு இவர்கள் சாட்சிகளாவார்கள்"

இதைக் கூறிய பிறகு இருவரும் பதிவுப் புஸ்தகத்தில் உரிய இடத்தில் கையொப்பமிட வேண்டும். இரு சாட்சிகளும் பதிவுகாரரும் தத்தம் கையொப்பமிடுவர். இச்சடங்குகள் முடிந்ததும் இரு தம்பதிகளும் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட்டாலும் சரி ஈடுபடாவிட்டாலும் சரி புருஷன் மனைவியெனவே கருதப்பட்டு விவாக முறைப்படி வரும் உரிமை கடமையாவற்றிற்கும் ஆளாவார்கள்.

### விவாகம் சூனியமாதல்

விவாகம் சட்டத்தில் குறிக்கப்படாத இடத்தில் நடந்தாலும், அல்லது பொய்ப் பெயரில் பதிவு செய்யப்பட்டாலும் அல்லது அறிவித்தற் தராதரப் பத்திரம் பெறாமல் செய்யப்பட்டாலும் அல்லது சட்டத்தால் அனுமதிக்கப்படாதவர்களால் பதிவு செய்யப்பட்டாலும், அத்தோடு இரு தம்பதிகளும் இம்முறைகேட்டை அறிந்துகொண்டும் வேண்டுமென்றே பதிவுக்குடன்பட்டிருந்தாலும் அவ் விவாகம்சூனியமானதும் பெறுமதியற்றதுமாகும்.

ஆனால் ஒரு தம்பதி கபடமற்றிருக்க மற்றத் தம்பதி பொய் அறிவித்தல் கொடுத்தோ, அல்லது பொய் விவாக அறிவிப்புத் தராதரப் பத்திரத்தைக் காட்டியோ அல்லது பொய்யான அத்தாட்சியைக் கொடுத்தோ ஒரு முறையான விவாகத்தை நடாத்தினால் அவ்விவாகம் வேறு வழிகளில் சட்டரீதியான விவாகமாயிருந்தால் மேற்கூறிய காரணங்களால் சூனியமான விவாகமாகமாட்டாது.

### குற்றவாளித் தம்பதிக்கு தண்டனை

ஆனால் அப்படிக் குற்றச் செயலைச் செய்த தம்பதி மற்றத் தம்பதியிடமிருந்து விவாக உரிமைப்படி வரும் ஆதன சலாக்கியங்களை இழப்பர். இதற்கு மாவட்ட நீதிமன்றத்துக்கு மனுப்பண்ணினால் நீதிமன்றம் விசாரணை செய்து குற்றம் உண்மையென அறிந்தால் குற்றம் செய்த தம்பதியின் உரிமையைப் பறிப்பதுமன்றி, குற்றமற்ற தம்பதிக்கு அல்லது அவ்விவாகத்தால் வரும் சந்தானங்களுக்கு அவ்வுரிமைகள் சேருமாறு தீர்ப்பளிக்கவும் உரித்துண்டு.

உதாரணமாக ஒருவர் தான் ஒரு இடத்தில் பத்து நாட்கள் தொடர்ந்து வசித்திராதபொழுதிலும் விவாக அறிவித்தல் பத்திரத்தில் வேண்டுமென்றே அப்படி வசித்ததாக எழுதினால் அல்லது பதிவுகாரரை ஏமாற்றுவதற்காகத் தன் தம்பதியின் வயது 21க்கு மேற்பட்டதென எழுதினால் அவ்விவாகம் சட்ட ஒழுங்குத் தவறிய போதிலும் பெறுமதியுள்ளது ஆகும். ஆனால் அப்படிப் பொய்க்கூற்று செய்த தம்பதி மேற்கூறிய நஷ்டத்துக்காளாவர்.

### பதிவின் பின் ஆட்சேபம் செல்லுபடியாகாது

ஒரு விவாகம் முறையாகப் பதிவு செய்த பிறகு அவ் விவாகத்தைச் சூனியமாக்கும் நோக்கத்துடன் முறையான இடத்திலே விவாகச் சடங்கு நடக்கவில்லை, அல்லது முறையான நேரத்தில் அது நடத்தப்படவில்லை அல்லது வேண்டியவர்களின் சம்மதம் பெறப்படவில்லையென்னும் காரணங்கள் நீதிமன்றத்தில் ஏற்கப்படமாட்டா. ஆனால் தலைப்பில் குறிப்பிட்டபடி சம்மதம் கொடுக்க வேண்டியவர் அல்லது நீதி அதிகாரி இவ்விஷயத்தைக் காட்டி 21 வயதுக்கு மேற்பட்ட தம்பதியின் விவாக ஆதன உரிமையைப் பறிப்பதற்கு வழக்குத் தொடரலாம்.

### அடுத்தவாரம்

அடுத்த கட்டுரையில் விவாகப் பெறுமதிக்கு (Validity of Marriage) விவாகம் கட்டாயம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டுமோ என்பதையும் தேசவழமைச் சட்டப்படியுள்ள விவாக விதிகளையும் கவனிப்போம்.

# தொழிற் சங்க இயக்கம்

## அத்தியாயம் 2 : ஆரம்பம்

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).,
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனாஸ் பல்கலைக் கழக கல்லூரி:

(சென்றவாரத் தொடர்ச்சி)

தொழிற் கலைஞர் சட்டம் மத்தியகால மனோபான்மையை, அதாவது பொருளாதார அமைப்பு அரசினர் கட்டுப்பாடு பாதுகாப்புப்படி அமைய வேண்டும் என்ற அபிப்பிராயத்தை தழுவியே உருவாக்கப்பெற்றது. பழைமைப் பந்தத்தை இறுகப் பிணித்து நிலைநாட்டுவதே இதன் நோக்கமாக இருந்தது.

3. தொழிற் கலைகளை அப்பியாசித்தற்கு உரிமையளிக்கும் (லண்டன் மாநகரில் நிலவிய) கடினமான கட்டாயப் பயிற்சி முறை நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்ற கட்டுப் பாடுவிதிக்கப்பட்டது.

### தொழிற் சங்கம் நடத்த முடியாது

எனவே இச்சட்டத்தின் ஆணைக்குட்பட்ட தொழில்களில் தொழிலாளர் வேதன உயர்வு கோரிக் கிளர்ச்சி செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகப் பெறப்பட்டது. அச்சட்டத்தை நிர்வகிக்குமாறு அரசாங்கத்தையோ நீதிமன்றத்தையோ மனுச் செய்வதற்காக மாத்திரம் தொழிலாளர் கூடவோ ஸ்தாபனம் நிறுவவோ இயலுமேயல்லாமல் வேதன உயர்வுக்காக அல்லது இதர மாற்றங்களுக்காக கிளர்ச்சி செய்யும் நோக்கமாக கூட்டு இயக்கம் எதுவும் ஸ்தாபிக்க முடியாது. மேற்கூறிய சட்டம் சட்ட நூலில் இருக்கும் வரையும் தொழிற் சங்கங்கள், அதாவது இன்றைய உலகில் நாமறிந்த தன்மையான தொழிற் சங்கங்கள், சட்டரீதியாக நிலவ முடியாமலிருந்தது. ஆயினும் தொழிலாளர் நட்புறவுச் சங்கங்கள் (Friendly Societies) என்று கூறி அதாவது தொழிலாளர் ஒருவருக்கொருவர் கஷ்டகாலங்களில் பரஸ்பர உதவிபுரிதல், நன்கொடைப் பணம் உதவுதல் என்ற நோக்கங்களைப் பிரகடனம் செய்து, கூட்டு இயக்கங்கள் நடாத்துவது வழக்கமாயிற்று.

### பலாபலன்

இச்சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட நிலைமையின் மூன்று அம்சங்களை இங்கு குறிப்பிடுவோம்.

1. குறிக்கப்பட்ட தொழில்களில் தொழிலாளர் சேவையில் அமர்த்தப்படும் ஒப்பந்தங்கள், வேலை நீக்கத்தின்பொழுது அனுசரிக்க வேண்டிய நிபந்தனைகள், நோப்பிரமாணங்கள் போன்றவை விதிக்கப்பட்டன.
2. தொழிலாளர் வேதனங்கள் வருடாவருடம் ஒவ்வோர் ஊரிலுமுள்ள நீதிமன்றங்களால் ஆராயப்பட்டு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது.

### அமுலாக்குவதில் கஷ்டம்

காலம் செல்லச் செல்ல போட்டிப் பண்பு அதிகரித்ததன் காரணமாகவும் நவீனம் நவீனமான தொழிற் கலைகளும், யந்திரங்களும் உருவெடுத்தமையினிமித்தமும், மேலே குறிப்பிடப்பட்ட தொழிற் கலைஞர் சட்டம் அநுசரணைக்குக் கொண்டு வருதல் நாளடைவில் கடினமாகி வந்தது; 18ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பாராளுமன்றமும் நீதிமன்றங்களும் அச்சட்டத்தை அமுல் நடத்த முடியாமல் தேய்ந்து போகவிட்டனர். எனினும் தொழிற் சங்கங்கள் உருவாகுவதற்கு ஒருவகையில் பாதகமாகவும் ஒருவகையில் சாதகமாகவும் இருந்தது.

### சூழ் நிலை சரியாக இல்லை

சட்டத்தின் கட்டுப்பாடு ஒருபுறமிருக்க பொருளாதார அமைப்பின் நிலைமையும் தொழிற் சங்கங்கள் உருவாவதற்குச் சாதகமாக இருக்கவில்லை. பெருமளவில் தொழில் நடாத்தும் ஆலைகள் இல்லாதவரை ஓரிடத்தில் ஏராளமான தொழிலாளர் திரளச் சந்தர்ப்பம் கிடையாது. பல்வேறு முதலாளிமாரிடம் கடமை பார்த்ததின் நிமித்தம் அவர்களுக்கு ஒரேதன்மையான கஷ்டங்களும் பிரச்னைகளும் தோன்றவில்லை. மேலும் அனேக தொழில்களில் ஆலைத் தொழில் முறை நிலவாது இல்லத் தொழில் முறையே நிலவியது. அதாவது முதலாளிமார் தொழிலாளிகளிடம் மூலப்பொருட்களை விநியோகித்து விடுதலும் அவர்கள் தத்தம் இல்லங்கொண்டு சென்று உற்பத்தி செய்து திரும்பவும் முதலாளியிடம் ஒப்படைக்கும் வழக்கம் இருந்து வந்தது. இத்தகைய இல்லத் தொழில் முறை நிலவும் வரை தொழிற் சங்கங்கள் உருவாவதற்கு ஏற்ற சூழ்நிலை பொருந்தவில்லை.

# இந்திய வம்சாவழித் . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள நிலைமை. ஆயினும் நல்ல நினைவுகளோடு இன்ப அனுபவங்களோடு டாக்டர் பிரசாத் தாய்நாடு திரும்புவார் என்று நம்பிக்கை தெரிவித்தார் பிரதமர் பண்டாரநாயகா.

### பந்தம் பிடித்தால் போதுமா?

இந்திய வம்சாவழியினருக்கு செய்யக்கூடிய துரோகம் எல்லாவற்றையும் ஒன்று மாறி ஒன்றாகச் செய்துவிட்டு ஜனாதிபதி ரராஜேந்திர பிரசாத்துக்கு ராஜவரவேற்புக் கொடுத்து அவருக்குப் பின்னால் திரிந்து பந்தம் பிடித்துவிட்டால், "தங்களையே பின் பற்றுகிறோம் பிரபு" என்று பணிந்து கூறிவிட்டால், இரண்டு நாடுகளுக்குமிடையிலுள்ள நீண்ட நாள் தொடர்பை நினைவுபடுத்திவிட்டால், இராணி மாளிகையில் வைத்து இனிக்க இனிக்கப் பேசிவிட்டால் போதுமா?

### விருந்தாளிக்கு கோழிக் கறி

விருந்தாளி ஒருவர் வீட்டுக்கு வந்துவிட்டால் ... வீட்டுக் கோழி சார் இது! நீங்கள் ஒரு மாதக் குஞ்சாகத்தந்தது. கொழு கொழு என்று இருக்கிறது அல்லவா!" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே அதன் கழுத்தில் கத்தியை வைப்பார்கள். கோழி சிறகடித்துத் துடித்து உயிருக்காக மன்றாடுவதைப் பற்றி விருந்தாளிக்கு சிறிதும் கவலை ஏற்படுவதில்லை. காரமான கோழிக் கறியை ஆர அமர இருந்து சுவைத்துவிட்டு, "பிரமாதம், விருந்து பிரமாதம்! கோழிக் கறி தேவாமிர்தம்!!" என்று பாராட்டுவழங்குவார்.

### அவர் டில்லி விருந்தாளி

இலங்கைத் தமிழர்களை விட்டுத் தள்ளுங்கள் தற்போதைக்கு. டாக்டர் பிரசாத்தை கௌரவ விருந்தாளியாக வரவேற்ற அதே சமயத்திலும் இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவழித் தமிழனின் கழுத்தில் வைத்த கத்தியைச் சிறிதும் தளர்த்தவில்லை. ஆயினும் டாக்டர் பிரசாத் இலங்கை அரசாங்கத்தையும் மக்களையும் வாயாரப் பாராட்டிவிட்டுச் சென்றுவிட்டார். "நல்ல நினைவோடு செல்கிறேன்" என்று சொல்லிவிட்டே ... அவர் நமக்கு டில்லியிலிருந்து வந்த விருந்தாளியாயிற்றே!

தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை நீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்ரோட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லட்சக்கணக்கான ரூபாய் செலவில் பி. ஆர். பந்துலு முழு நீளவர்ணப் படமாகத் தயாரித்து வெளியிட்டிருக்கும் "வீரபாண்டிய கட்டப்பொம்மனி"ல் சுவையானதோர் கட்டம். கட்டப்பொம்மனாக நின்று கணேசன் கையுயர்த்தி ஆசீர்வதிக்க எஸ். வரலட்சுமியும் தேவரும் ஏன் இப்படி மலைத்துப் பார்க்க வேண்டும்? சிலோன் தியேட்டர்ஸாரின் திரைகளில் விரைவில் விடை கிடைக்கும் என்று தெரியவருகிறது.

# யார் சிறந்த நடிகன்?

## டைரக்டர் கிருஷ்ணன் சொல்லுகிறார்

"கூடியுடா வசனங்களை ஒருவர் சரமாரியாகப் பொழிந்து தள்ளுவதனால் மட்டும் அருவர் சிறந்த நடிகராகிவிடமுடியாது" என்று டைரக்டர் கிருஷ்ணன் கூறினார்.

அரவிந் பிக்சர்ஸாரின் "அருமை மகள் அபிராமி" என்ற படத்தை இவர் டைரக்ட் செய்து வருகிறார். இவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வசனங்கள் கதைக்குத் தகுந்தபடி அமைக்கப்பட வேண்டும். ஒருவர் வசனத்தைப் பேசக்கூடியவராக இருந்துவிட்டால் அவரைப் பயன்படுத்த எண்ணி அதிக வசனங்களைக் கொடுத்துப் படத்தைப் பாழாக்கக் கூடாது.

"நடிகர்களைப் பொறுத்தவரையில் ஒருவரால் வசனமே பேசாமல் சில முக பாவங்களினாலும் ஜாடையினாலும்கூட தன் திறமையை வெளிப்படுத்த முடியும். இப்படிப்பட்டவனைத் தான் நான் சிறந்த நடிகன் என்று கூறுவேன்"—இவ்வாறு டைரக்டர் கிருஷ்ணன் கூறினார்.

வடநாட்டுப் பிரபல நடிகை காமினி கௌஷல் பிரதம பாகந் தாங்கி நடிக்கிறார்.

## சர்க்கஸ் சுந்தரி

அழகான இளம் பெண், வாலைக் குமரி நிலத்தில் மல்லாந்து படுத்துக் கொள்ள அவளுக்கு மேலால் பென்னம் பெரிய யானை ஒன்று சர்வசாதாரணமாக நடந்து செல்கிறது. பெண்ணின் எலும்பு பொடிப் பொடியாகியிருக்குமே என்று நாம் பயந்து நடுங்கும் போது சிரித்த முகத்தோடு அந்தச் சிங்காரி எழுந்து வணக்கம் தெரிவித்துவிட்டு விர்ரென்று உள்ளே சென்று விடுகிறாள்.

இப்படி இப்போது கொழும்பு கெயிட்டியில் காண்பிக்கப்படும் "சர்க்கஸ் சுந்தரி" என்ற படத்தில் (இந்தியிலிருந்து தமிழாக்கப்பட்டது) நிஜமாக நடக்கிறது. இதைவிட மெய் சிலிர்க்கவைக்கும் இன்னும் பல சாகஸச் செயல்களையும் படத்தில் பார்க்க முடிகிறது.

**G. C. E. ஒகஸ்ட்/டிசம்பர்**

★ தமிழ் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியடைவது சுலபமாகிவிட்டது.

★ ஒகஸ்ட்-டிசம்பர் பரீட்சைகளுக்கு அற்லஸ் ஹோல் அளிக்கும் புதுப் பாடங்கள் தயாராய்விட்டன.

★ எல்லாப் பாடங்களுக்கும் கடந்தகால பரீட்சைகளின் வினா விடைகள் உண்டு.

★ அத்தோடு மாதிரி வினா விடைகளும் தனியாக உண்டு.

★ தனித்தனிப் பாடத்துக்கு விலை ரூபா 3-00 தபால் செலவு சதம் 35.

★ புதிய பாடத்திட்டம், பரீட்சை விதிகள் என்னும் விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

அற்லஸ் ஹோல்

தபால் பெட்டி: 649. போன்: 9759.

723, மருதானை ரோட், கொழும்பு.

## எம். ஜி. ஆர். குணமடைந்து வருகிறார்

நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக விழுந்து கால்எலும்பை முறித்துக் கொண்ட புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் இப்போது குணமடைந்து வருகிறார்.



தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் தமது புகழ் பெற்ற "இன்பக் கனவு" என்ற நாடகத்தை 16-6-59-ல் நடித்துக் கொண்டிருக்கும்போது விபத்து நேர்ந்தது. சண்டைக் காட்சியின் போது அதிகஎடையுள்ளவரான குண்டுமணி என்ற நடிகரைத் தூக்கிய சமயம் சறுக்கி விழுந்து விட்டதன் காரணமாகவே விதத்து நடந்தது என்று சில பத்திரிகைகளில் வெளியான செய்தியை மறுத்து எம். ஜி. ஆர். அறிக்கை விட்டிருக்கிறார். தமது விபத்துக்கு குண்டுமணி எந்த விபத்திலும் காரணமாக இருக்கவில்லை என்று அதில் அவர் கூறியிருக்கிறார்.

தமது உடல் நிலை பற்றி தந்திகள் மூலமும் நேரில் சென்றும் விசாரித்து வரும் எல்லோருக்கும் அவர் அந்த அறிக்கையில் நன்றி தெரிவித்திருக்கிறார் நல்ல டாக்டர்கள் சிகிச்சை செய்கிறார்கள் என்றும் அனேகமாக இன்னும் மூன்று மாதங்களில் தமக்கு பூரண சுகம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

எம். ஜி. ஆருக்கு விபத்து நேர்ந்த செய்தி நடிப்புலகக் கலைஞர்களையும் ரஸிகர்களையும் ஒரே கலக்காக கலக்கி விட்டது. ரஸிகர்கள் எம். ஜி. ஆரின் வீட்டை முற்றுகையிடத் தொடங்கியது போக நடிகர் நடிகைகளும் தத்தம் ஜோலிகளை அப்படி அப்படியே விட்டு விட்டு எம். ஜி. ஆரைப் பார்க்க விரைந்தார்கள். இவர்களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

# ஆங்கில வர்ணப் படத்தில் வைஜயந்தி

## இந்தியா திரும்பியதும் நடிக்க ஏற்பாடுகள்

### ஐரோப்பிய நாடுகளில் அமோக புகழ்

ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு விரைவில் இந்தியா திரும்ப இருக்கும் ஆடல் அழகி வைஜயந்திக்கு ஆங்கில வர்ணப் படம் ஒன்றில் நடிக்கும் சந்தர்ப்பம் காத்துக் கிடக்கிறது என்று தெரியவருகிறது.

"பாடும் மலை" என்ற பெயரில் முற்றும் இந்தியச் சூழ்நிலையை வைத்து அமெரிக்கப்படத் தயாரிப்பாளர் ஒருவர் இந்தியப் படத்தயாரிப்பாளர் ஒருவரின் கூட்டுறவோடு இந்தியாவில் ஒரு அற்புதமான படத்தை சுமார் 50 லட்சம் ரூபா செலவில் தயாரிக்க இருக்கிறார்.

இந்தப் படத்திலே வைஜயந்தி நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஹொலிவூட் நடிகை பீர் ஆஞ்செலியும் மற்றும் அமெரிக்க நடிகர் நடிகைகளும் பங்கெடுத்துக் கொள்ளும் "பாடும் மலை" படத்தில் நடிக்க இருக்கும் ஒரே ஒரு தமிழ் நடிகை வைஜயந்தியே ஆவர்.



வைஜயந்திமாலா

இதுபோக திலிப்குமாருடனும் வைஜயந்தி சோடியாக நடிக்க இருக்கிறார் என்று அறியவருகிறது. இந்திப் படங்கள் பலவற்றை எடுத்துப் புகழ் பெற்ற ஏ. ஆர். கர்த்தார் "உமர் கய்யாம்" என்ற பெயரில் விரைவில் ஒரு படத்தை எடுக்க இருக்கிறார். இதில் கதாநாயகனாக திலீப் குமாரும் கதாநாயகியாக வைஜயந்தியும் நடிக்க ஏற்பாடு செய்யப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது.

வைஜயந்தி பாரிஸில் நடனமாடிவிட்டு இங்கிலாந்து சென்றது தெரிந்ததே. இங்கிலாந்தில் புதுப்புது நடனங்களையெல்லாம் அவர் ஆடினார். ரஸிகர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அங்கு பெருகியது. வைஜயந்திக்கு நல்ல புகழும் கிடைத்தது. இந்தக் குஷியில் ஒயிலான தோற்றத்துடன் மயிலாக ஆடினார். வெள்ளையர்கள் விழுந்தடித்துக்கொண்டு போய் அவரின் நடனங்களைப் பார்த்து வெகுவாக ரஸித்தார்கள். சில ஆட்டங்களின்போது இந்தியாவின் தூதுவராக இங்கிலாந்தில் இருக்கும் விஜயலட்சுமி பண்டிட்டும் சமூகமளித்திருந்தார். அவரும் வைஜயந்தியின் நடனங்களைப் பாராட்டினார்.

வைஜயந்தி இப்போது லண்டனைவிட்டுப் புறப்பட்டு ருஷ்யாவுக்கு சென்றிருக்கிறார். அங்கும் அவர் நடன நிகழ்ச்சிகள் நடத்துவார். அடுத்த மாதம் நடுப்பகுதிக்கிடையில் எப்படியும் அவர் இந்தியா திரும்பி வருவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தியாவில் அவருக்கு மகத்தான வரவேற்புக் காத்திருக்கிறது.

## செய்திக் கதிர்

**கவலை இல்லாத மனிதன்:**

கண்ணதாசன் பிலிம்ஸாரின் மூன்றாவது தயாரிப்பான "கவலை இல்லாத மனிதன்" படப்பிடிப்பு துவக்க விழா சமீபத்தில் பரணி ஸ்டுடியோவில் நடைபெற்றது. மேற்படி விழாவின் போது நகைச்சுவை நடிகர் சந்திரபாபு பேசினார். இவரேதான் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடிகவேள் எம். ஆர். ராதாவும் இதில் நடிக்கிறார் கதை வசனம் பாடல்கள் கவிஞர் கண்ணதாசன். டைரக்ஷன் சங்கர். அதாவது சிவகெங்கைச் சீமையை டைரக்ட் செய்து புகழ் பெற்றவர்.

**கொஞ்சும் சலங்கை:**

ராமன் புரொடெக்ஷன்ஸின் "கொஞ்சும் சலங்கை" என்ற டெக்னிக் கலர் படம் ஆகஸ்டில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நரசு ஸ்டூடியோவில் தயாராகும் இப்படத்தை டைரக்டர் எம் வி ராமன் டைரக்ட் செய்துவருகிறார்.

இலங்கேஸ்வரன் மனோகர், குசலகுமாரி முதலானோர் இந்தப் படத்தில் நடித்து வருகிறார்கள்.

**டாக்டர்:**

ஆகஸ்ட் வெளியீடாக வரவிருக்கும் "டாக்டர்" என்ற படத்துக்கான காட்சிகள் அருணாசலம் ஸ்டுடியோவில் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

சூரியகலா இதில் நகைச்சுவைப் பாகம் ஏற்று நடிக்கிறார். இது புதுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படத்தில் கதை வசனம் டைரக்ஷன் வேலன்.

**விருந்து:**

"ஒரே வழி" என்ற படத்தை எடுத்த வாசுமேனன் "விருந்து" என்ற பெயரில் இன்னொரு படத்தை எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

(13-ம் பக்கம் பார்க்க)

## ஒவ்வொரு மாகாணத்திலும் நாடக அரங்கு

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் லட்ச ரூபாய் செலவில் ஒவ்வொரு நாடக அரங்கை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

மத்திய அரசாங்க கலாச்சார அமைச்சர் புரபஸர் ஹுமாயூன் கபீரின் எண்ணப்படி இது விஷயத்தில் தற்போது இராச்சிய அரசாங்கங்களின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அனேகமாக 1961-ல் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு நாடக அரங்கு கிடைத்து விடும் என்று நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக் கடிதம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துவதென்றும் அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் இன்னும் எடுத்தே தீரவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

### 1300 பேர் கைது 14 பேர் சாவு

கேரள கல்விச் சட்டத்தை முன்வைத்து கேரள கொம்யூனிஸ்டு அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யும்படி வற்புறுத்தி கேரள காங்கிரஸ் கட்சியினர், பிரஜா சோஷலிஸ்டு கட்சியினர், முஸ்லிம் லீக்கினர், கிறிஸ்தவர்கள் ஆகியோர் பெரும் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள் என்பதும்; பாடசாலைகள், பஸ் நிலையங்கள் அரசாங்க காரியாலயங்கள் முன்னால் மறியல் நடைபெற்று வருகிறது என்பதும் தெரிந்ததே. இப் போராட்டத்தில் 1,300க்கு அதிகமானோர் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பொலீஸார் 3 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 14 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 4 பேர் காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லப்படுகிறது.

### இந்திரா காந்தியும் தேபரும் நேருவும்

காங்கிரஸ் தலைவி இந்திரா காந்தி கேரள அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் கண்டித்ததோடு கேரள பிரதேச காங்கிரஸைக் கிளர்ச்சியை வாபஸ் பெறும்படி சொல்லுவதற்கு தம்மிடம் காரணம் எதுவும் இல்லை என்றும் ஏற்கனவே கையை விரித்துவிட்டார். முன்னாள் தலைவர் தேபரும் கேரள நிலைமையை நேரில் சென்று பார்த்துவிட்டு இந்திரா காந்தியின் கூற்றையும் போக்கையும் நியாயமென்று காட்டும் வகையில் கருத்து வெளியிட்டு இருக்கிறார். பிரதமர் நேருவும் கிளர்ச்சியை நிறுத்தத் தம்மாலானவரை முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை.

### பதிலுக்குப் பதில் நடக்கும்

இதனால் பலருக்கும் இருந்த சந்தேகம் இப்போது வலுப்பெறுவதாய் இருக்கிறது. அதாவது காங்கிரஸ் மேலிடந்தான் சூத்திரதாரியாய் இருந்து கேரளக்கிளர்ச்சியை நடத்தி வருகிறது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுகிறது. இந்தியாவில் மொத்தமுள்ள 14 இராச்சியங்களில் கேரளத்தில் மட்டுந்தானும் எதிர்க் கட்சியை (கொம்யூனிஸ்டு கட்சி) ஆட்சி நடத்தக் காங்கிரஸ் அனுமதிக்காது என்றால், பஞ்சாப் போன்ற இதர இராச்சியங்களில் போதிய மெஜாரிட்டிப்பலம் இல்லாமல் தட்டுத்தடுமாறி ஆட்சி நடத்தும் காங்கிரஸ் அங்கெல்லாம் சோதனைக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகும். கேரளத்தில் காங்கிரஸார் செய்வதை குறிப்பிட்ட அந்த இராச்சியங்களில் கொம்யூனிஸ்டுகள் மற்ற எதிர்க் கட்சிகளின் ஆதரவோடு செய்ய முடியும். இதை கேரள முதன் மந்திரி நம்பூதிரிபட்டும் மற்றும் கொம்யூனிஸ்டு தலைவர்களும் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள்.

### மூன்று கட்சிகளின் கூட்டங்கள்

கேரள நிலைமை பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வர காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்ட் நாளை வெள்ளிக்கிழமை டில்லியில் கூடுகிறது. கொம்யூனிஸ்டு கட்சி திருவனந்தபுரத்தில் கூடுகிறது. பிரஜாசோஷலிஸ்டு கட்சியும் கோயமுத்தூரில் கூடுகிறது. மூன்று கட்சிகளும் எடுக்கும் முடிவைப்பொறுத்துத்தான் இருக்கிறது கேரளத்தின் வருங்கால நிலை.

## செய்திக் கதிர்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலையா, ரங்காராவ், எம். என். ராஜம் முதலானோர் இதில் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறார்கள். டைரக்ஷன் கே. சங்கர்.

**கடவுள் எங்கே?:**

மக்களுக்குச் செய்யும் சேவையே கடவுளுக்குச் செய்யும் சேவையாகும் என்ற கொள்கை வழி நின்று சமூகப் பணிபுரியும் வாலிபன் ஒருவனின் வரலாற்றை "கடவுள் எங்கே?" என்ற பெயரில் இசைமணி பிலிம்ஸார் படமாக்கத் துணிந்துள்ளார்கள். படப்பிடிப்பு வேலைகள் ஆரம்பமாகி விட்டன.

—

## ஒற்றுமையின்...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் கைகளின் ஒன்று கூட்டிய வலிமையினால் உட்சென்றார்கள் என்று. இதிலிருந்து கம்பன் எடுத்துக் கொண்ட உலக உண்மையை—ஒற்றுமையின் பலத்தை—ஒற்றுமையின் வெற்றியை நன்கு நமக்கு விளக்கிவிட்டான். இதுதான் கம்பனின் கவித்திறமை.

—எஸ். சோமசுந்தரம்
கொம்மாதுறை

## விவேகானந்த சபை

—

### ஆண்டுக் கூட்டம்

கொழும்பு விவேகானந்த சபையின் 56-வது ஆண்டுக் கூட்டம் எதிர்வரும் 28-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் சபை மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிகிறது.

ஆண்டுக் கூட்டத்தை யொட்டி செயலாளர் திரு. சி. இராசதுரை வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் மொத்தம் 1123 அங்கத்தவர்கள் இருப்பதாகவும், விவேகானந்த வித்தியாலயத்தில் 1225 மாணவர்கள் கல்வி பயில்வதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

புதுச்செட்டித் தெருவில் சபை வாங்கிய புதிய ஆதனத்தைப்பற்றிக் கூறுகையில் "இவ்வாதன விலையில் ரூ. 55,000 இதுவரை சேகரித்துக் கொடுக்கப்பட்டுளது. இவ்வாதனத்தைச் சபையின் உடைமையாக்கிக் கொள்ள இன்னும் ரூ.30,000 தேவைப்படுகின்றது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## மொத்தம் 24 ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கேற்ப அவரவர் மொழியில் வெளியிடப்பட வேண்டு[illegible] அப்படி வெளியிடுவது [illegible] முயற்சியாகையால் [illegible]பாக தமிழிலும் சிங்களத்[illegible]லும் வெளியிடும்போது ஊர்ப்பெயர்களிலும் வாக்காளர்கள் பெயர்களிலும் பிழைகள் ஏற்படலாம். இதைத் தவிர்க்க சரியான முன்னேற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும்.

### வற்புறுத்தக் காரணம்


18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமை பெறுவதால் அவர்கள் பெயர்களும் இம்முறை தயாரிக்கப்படவிருக்கும் தேர்தல் இடாப்புகளில் சேர்க்கப்படவேண்டும். அதுவும் புது முயற்சியாதலால் சிரமங்கள் பல தோன்றலாம்; பிழைகள் பல நேரலாம். அவற்றைத் தவிர்க்க முடிந்த முயற்சிகளையெல்லாம் அரசாங்கம் செய்தாக வேண்டும். இந்தக் கஷ்டங்களை உத்தேசித்தே தேர்தல் இடாப்புகளைத் தயாரிக்கும் வேலையைக் காலந்தாழ்த்தாமல் இப்பொழுதே தொடங்கிவிடுவது அவசியம் என்று வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

### அருந்ததியர் சங்க ஆண்டு விழா

அகில இலங்கை அருந்ததியார் (அரிசன) சங்கத்தின் 27-வது ஆண்டு விழா வருகிற ஞாயிற்றுக்கிழமை (28-6-59) மாலை 4 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. மா. மு. இராசகோபால் தலைமையில் நடைபெறும்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. கண்டேலியா விழாவைத் துவக்கி வைப்பார். திருவாளர்கள் எஸ். டி. சிவநாயகம், செனட்டர் ஜி. நல்லையா, ஆ. வேலாயுதம், கா. பொ. இரத்தினம், எஸ். சோமசுந்தரம், மூ. வேலாயுதம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.


கொழும்பில 3-வது வாரம்!
எல்பின்ஸ்டன் ரெக்ஸி
(1959-ம் வருடத்துச் சிறந்த படம் என்று பாராட்டும், இந்திய அரசாங்கத்தின் பரிசும் பெற்ற படம்)



சிவாஜி கணேசன்
பத்மினி
நம்பியார்
ராஜம்
ராஜகோபால்
காலஞ் சென்ற
கிருஷ்ணன்
ராஜகுமாரி
ஆகியோர் நடித்த
தங்கப் பதுமை



விடுதலை வேட்கை கொண்ட தமிழ் உள்ளங்களுக்கு அரிய விருந்து!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஓடியன் (கல்கிசை) ஜோதி (திருகோணமலை) லிபர்ட்டி (பதுளை)

ஆகிய தியேட்டர்களில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிவகெங்கைச் சீமை

★

எஸ்.எஸ். ராஜேந்திரன், எம்.என். ராஜம், கமலா லெக்ஷ்மணன், பி. எஸ். வீரப்பா, எம். எஸ். முஸ்தபா, டி. கே. பகவதி.

கதை, வசனம், பாடல்கள்.
கண்ணதாசன்

டைரக்ஷன்: கே. சங்கர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. குங்குமப்பூ என்ருல் என்ன? இது எப்படிக் கிடைக்கிறது?

—அ. பஞ்சாட்சரம், வட்டக்கட்சி

2. எக்ஸ்றே (X-Ray) மூலம் உடலுக்குள் உள்ள உறுப்புகளைப் பரிசோதிக்கிருர்கள் அல்லவா? இந்தப் பெயர் எப்படி வந்தது?

3. மின்னலும் முழக்கமும் ஒரே நேரத்தில் ஏற்பட்டாலும் மின்னலைத்தான் நாம் முதலில் பார்த்துத் தெரிந்து கொள்ளுகிருேம். காரணம்?

4. மின்சார அலையின் வேகம் என்ன?

—எஸ். எம் எஸ். ஏ. மௌலானு, வாழைச்சேனை

5. சாதாரணமாக ஒரு தீப்பெட்டியில் எத்தனை குச்சிகள் உண்டு? குடையில் எத்தனை கம்பிகள் உண்டு?

—கே. வி. இராஜு, கொழும்பு—8

## ..............பண்டிதனுவான்

### ஒற்றுமையின் வெற்றி!

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்றும், "ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு” என்றும் “ஒற்றுமையே பலம்” என்றும் பல வாக்கியங்களை அன்ருட வாழ்க்கையில் நாம் படித்திருக்கிருேம்—அதன் பலனைக் கண்ணுல் கண்டுமிருக்கிருேம். ஆனல் அந்த ஒற்றுமையின் வெற்றியைக் “கவியரசர் கம்பர்” கன்னித் தமிழால் ஹாசிய உணர்ச்சியுடன் விளக்கியிருக்கிருர். கம்பராமாயணத்தை நாம் படிக்கின்ற நேரத்தில் இப்பாடல் நம் கருத்தைக் கவருகிறது.

“திண்திறல் வீரன் வாயில்
திறத்தலும் சுவாத வாதம்
மண்டுறவீரர் எல்லாம்
வருவது போவதாகிக்
கொண்டுறு தடக்கைபற்றிக்
குலமுடை வலியினுலே
கண்துயில் எழுப்ப எண்ணிக்
கடிதொருவாயிற்புக்கார்”

ஆம்! இராவணனின் கட்டளையைச் சிரமேற்கொண்ட ஆயிரம் மல்லர்கள் மான வீரன் கும்பகர்ணனின் வாயிலை அடைகிருர்கள். அப்பொழுது அவன் விடுகின்ற சுவாசக் காற்ருனது இம்மல்லர்களை உட்செல்லவிடாது வெளியில் தள்ளுகிறது. ஆனல், அதேநேரத்தில் அவர்களால் வெளியில் வர முடிந்ததா? என்ருல் அதுவுமில்லை. ஆம்! கும்பகர்ணன் உட்சுவாசம் அவர்களை உள்ளேயும், வெளிச்சுவாசம் அவர்களை வெளியேயும் தள்ளித் தத்தளிக்கச்செய்கிறது. இக்காட்சியைத்தான் “கம்பர்” ஹாஸியத்துடனும், காவியச் சுவையுடனும் நமக்களித்து, நம்மைச் சிரிக்க வைத்துச் சிந்திக்கவும் செய்கிருர். அப்படியானுல் மல்லர்களின் கடைசி முடிவென்ன? இதுதான் கம்பர் நம்மிடத்தில் கேட்கும் கேள்வி? மறுகணம் அவரே பதில் சொல்லுகிருர்:

“..........................
..........................
கொண்டுறுதடக்கை பற்றிக்
குலமுடைவலியினுலே
..........................
கடிதொருவாயில் புக்கார்”

ஆம்! உட்செல்லவும் வெளியேறவும் முடியாது திண்டாடிய அம்மல்லர்கள்

(13-ம் பக்கம் பார்க்க)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை “வளர்மதி”யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து “வளர்மதி” C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 6.

பெயர்..........................................

பாடசாலை..........................................

விலாசம்..........................................

..........................................

.......................... ..........................

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்




## நான் கண்ட கனு!

(கே. எஸ். அரியநாயகம்)

அன்ெருருநாள் ஞாயிற்றுக்கிழமை. அடுத்த நாள், அதாவது திங்கட்கிழமை நம் அரசாங்கத்தாரால் நடத்தப்படும் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெறவிருந்தது. அதில் என்னவென்ன வினக்கள் வருமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். எனது அறையின் மூலையில் சுடர் விட்டு எரிந்துகொண்டிருந்த விளக்கும் ஒளி குன்றிக்கொண்டே போனது நானும் அயர்ந்து நித்திரை செய்ய ஆயத்தமானேன் என் மனதில் பற்பல எண்ணங்கள் ஊசலாடிக் கொண்டிருந்தன.

ஒரு தந்திச் சேவகன் என் வீட்டுக் கதவில் வந்து தட்டினன். அவனிடம் ஒருதந்தி எனக்காக காத்துக்கொண்டிருந்தது. ஆவலுடன் தந்தியை வாங்கிப் பிரித்து அதிலுள்ளவாசகங்களை படிக்கலானேன். அதில் எனக்கு குதிரைப் பந்தய அதிஷ்ட சீட்டில் ஒரு லட்சம் ரூபாய் கிடைத்திருக்கின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. எனக்கு அளவில்லா ஆனந்தம் உண்டாயிற்று. எனது பெற்ருேருக்கும் அத்தந்தியை காட்டிவிட்டு நாளை பரீட்சை என்பதையும் மறந்து நாளைக்கே கொழும்புக்கு புறப்பட ஆயத்தமானேன்.

எனக்கு தேவையான பொருட்களை எடுத்துக் கொண்டு அட்டன் புகையிரத ஸ்தானத்திற்கு வந்தேன். புகையிரதம் வருவதற்கு இன்னும் அரை மணித்தியாலம் இருக்கின்றதென அறிவிக்கப்பட்டது. சிந்தனைச் சக்கரம் வெகு வேகமாக சுழன்றது. தண்ணீருக்கு வெளியே எடுத்த மீன் மீண்டும் மீண்டும் நீரினுட் செல்ல முயல்வது போல பல இனிய சிந்தனைகளை நோக்கி என் மனம் அடிக்கடி யோடியது. இப்பணத்தை என்ன செய்வது? இப்பணத்தை நான் கொண்டு வருமுன் யாரும் அபகரித்து விடுவார்களா? என்ற இதுபோன்ற சிந்தனைகள் என் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்த சமயம் “உடரட்ட மெனிக்கே” என்னும் மலை நாட்டு கடுகதிப் புகையிரதம் “நான் வெகு தூரத்திலிருந்து, அநேக நேரமாக ஓடிவருகின்றேன் எனக்கும் சிறிது நேரம் இளைப்பாறுதல் வேண்டும்” என்பதற்கிணங்க அதிவிரைவுடன் எமது புகையிரத ஸ்தானத்தினுள் வந்து நின்றது. நானும் புகையிரதத்தில் ஏறி அமர்ந்தேன்.

என் உள்ளக் கடலில் சிந்தனை அலைகள் கொந்தளித்தன. புகையிரதமும் தன் முதுகை வளைத்து வளைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. வழியினிருமருங்கிலும் தேயிலைத் தோட்டங்கள் பத்தரை மாற்றுப் பசும்பொன் விதானம் போல காட்சியளித்தன. காடுகளில் மரங்கள் அடர்ந்து பரவியிருந்தன. சில புகையிரத பூந்தோட்டங்களில் கண் சிமிட்டும் முல்லை மலர்கள் வெள்ளிக் காசுகள் போல விளங்கின.

இப்படியே இயற்கைக் காட்சிகளை ரசித்துக்கொண்டிருந்த [illegible] எம்புகையிரத வண்டியும் கொழும்பை நெருங்கிக் கொண்டிருந்தது. கொழும்பை அடைய தண்மெனளி வீசும் வெண்ணிலவும் உதயமாயிற்று. இருள் சூழ்ந்துவிடவே நானும் அன்றிரவை ஹோட்டலில் கழித்தேன்.

அடுத்தநாட் காலை என் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிறிது நேரத்திற்கு பின் பரிசில்கள் கொடுக்கப் படும் இடத்திற்கு சென்றேன். அங்கே என்னிலும் பார்க்க அறிவிலும், ஆற்றலிலும், உருவத்திலும் பெரிய மனிதர்கள் இருந்தார்கள். அவர்களில் சிறியவனுகிய நானும் ஒருவன் என எண்ணும் போது எனக்கு அளவில்லா ஆனந்தம் உண்டாயிற்று. சிறிது நேரந்தானிருக்கும் எனது பெயரும் வாசிக்கப்பட்டது. நானும் எனக்கு அதிஷ்டமாக கிடைத்த காசோலையைப் பெற்றுக்கொண்டேன். அப்போதுபல புகைப்படக் கருவிகள் என்னை நோக்கியே இருந்து தத்தம் வேலைகளை முடித்துக்கொண்டன. பல பத்திரிகை நிருபர்கள் என்னைப் பேட்டி காண வந்தார்கள். அவர்களிற் சிலர் இப்பணத்தை என்ன செய்யப் போகின்றீர்கள் எனவும் இதில் சிறிது பாகத்தை வறியவர்களுக்காக உதவி செய்யும்படி கேட்டார்கள். அவர்கள் எல்லாருக்கும் “நான் விடு சென்று அறிவிக்கிறேன்” என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

சிறிது தூரம்தான் சென்றிருப்பேன் சில காடைக் கூட்டங்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் என்னை நெருங்கியதும் என்னிடமுள்ள பணத்தை தரும்படி கேட்டார்கள். நான் “முடியாது” என்று சொல்லி மறுத்தேன். அப்போது அதில் ஒருவன் “பணத்தைக் கொடு அல்லது கொன்றுவிடுவேன்” என்று சொல்லித் தன் இடுப்பில் சொருகியிருந்த கத்தியை எடுத்து ஓங்கினன் அப்போது நான் “ஐயா அப்பா” என்று அலறினேன். அப்போது என் தகப்பனர் “ஏன் அலறுகின்ருய்” என்று கேட்டார்.

அப்போதுதான் நான் கட்டிலில் படுத்திருப்பதையும் நான் கண்ட அனைத்தும் கனவு என்றும் அறிந்தேன்.

## வளர்மதி புதிய மருமக்கள்

2363 த. சண்முகம், கொழும்பு—13.
2364 க. சுந்தரம், பண்டாரவளை
2365 சண்முகம் இராசசேகரம், அனலைதீவு
2366 சி. பூபாலசிங்கம், காரைநகர்
2367 வி. ஜெயரட்னம், ஆனைக்கோட்டை
2368 செல்வி வள்ளிநாயகி கதிர்காமத்தம்பி, திருகோணமலை
2369 அழகனுர், கோவை-1 தமிழ்நாடு
2370 சு. சிவப்பிரகாசம், கன்னுகம்
2371 கருணுசாகரா இராசரெட்னம், மட்டக்களப்பு
2372 வ. ஜெகப்பிரகாசன், சித்தங்கேணி
2373 எம். கே. கருப்பையா, அட்டன்
2374 கு. அகிம்லருனு, யாழ்ப்பாணம்
2375 மு. ரகுபதி, டிக்கோயா
2376 மூ. தாமோதரம், சோளாவில்
2377 எம். எச். எம். புர்க்கான், காலி
2378 பி. எம். வதுருதீன், கல்முனைக்குடி
2379 ந. அரசரெத்தினம், வட்டுக்கோட்டை
2380 த. மு. அ. லத்தீப், மதுரங்குளி
2381 ஆ. ம. அப்துல் றகுமான், மருதமுனை
2382 சி. சந்திராதேவி, சுதுமலை
2383 கா. சதாசிவம், அளவெட்டி
2384 செல்வி ஆ. சிவசோதி, பருத்தித்துறை
2385 ச. செல்வராசா, மாவிட்டபுரம்
2386 செல்வி கு. பத்மலோசனி, மட்டக்களப்பு
2387 சி. மாசிலாமணி, கரம்பன் தெற்கு
2388 செ இராசரெத்தினம், மாவிட்டபுரம்
2389 வே. தேவதாசன், மாவிட்டபுரம்
2390 செல்வி நளாயினி நாகேந்திரன், வெள்ளவத்தை
2391 க. பத்மநாதன், மட்டக்களப்பு
2392 செ. மயில்வாகனம், ஒவிலிகந்த
2393 எம். ஐ. சிருப்தின், கல்முனை
2394 மு. அப்துல் மஜீது, வந்தாறுமூலை
2395 எம். வை. சித்தி பரீதா துல்பிகார், குருநாகல்

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. குரோக்ஸ் சட்டைவஸ் என்னும் பெயருடைய சிறுசெடியின் பூவிலுள்ள சூல் முடிகளைக் கிள்ளி எடுத்து உலர்த்திய சருகுதான் குங்குமப்பூ.

2. எக்ஸ்றே படப் பிடிப்பு முறை கண்டுபிடிக்கப்பட்டபோதே அதைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் சரியாகப் புரியவில்லை. ஆங்கிலத்தில் அறியப்படாததற்கு (பெரும்பாலும் கணக்குப் போடும்போது) X என்று வைத்துக்கொள்வார்கள். இந்த மரபை ஒட்டியே ஒருவிதக் கதிர்கொண்டு எடுக்கப்படும் இந்தப் படப்பிடிப்பு முறைக்கும் Xவை முதலெழுத்தாகக்கொண்டு எக்ஸ்றே என்று பெயர் வைத்தார்கள்.

3. ஒலியைவிட ஒளியின் வேகம் அதிகம். அதனுற்ருன் முதலில் மின்னல் வெளிச்சம் நமது கண்களுக்குப் புலப்படுகிறது. அப்புறம் முழக்கம் கேட்கிறது.

4. ஒரு செக்கண்டுக்குள் பூமியை பதினெரு முறை சுற்றி வரும்.

5. தீப்பெட்டியில் 45முதல் 50வரை குச்சிகள் இருக்கும். குடையில் உள்ளது 8 நீண்ட கம்பிகளும் 8 சிறிய முட்டுக் கம்பிகளுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### மாணவர் இலக்கிய மன்றம்

பொகவந்தலாவை, சென் மேரிஸ் பாடசாலையின் மாணவர் இலக்கிய மன்றம் கடந்த 9-6-59-ல் திருவள்ளுவர் தினவு விழாவை மிகுந்த விமரிசையுடன் கொண்டாடியது.

திரு. க. குழந்தைவேலு ஆசிரியர் தலைமையில் நடந்த மேற்படி விழாவில், பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. ஜே. கி. தியோன், திரு சி. துரை ஆசிரியர் ஆகியோரது விரிவுரைகள் இடம் பெற்றன.

செல்வர்களான, து. தியாகராசா, கு. மார்க்கண்டு, சு. கணேசன், ப. ரெங்கசாமி ஆகிய மாணவர்கள் திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

—

### மாணவர் தேர்ச்சிச் சங்கம்

திருவள்ளுவர் (ஹரிஜன) பாடசாலை மாணவர் தேர்ச்சிச் சங்கத்தின் அமைப்புக் கூட்டம் சென்ற 10-6-59-ல் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. எஸ். சங்கர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சங்கத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

தலைவர்: கே. இராமகிருட்ணன், செயலாளர்: சி. சந்தானம், பொருளாளர்: எஸ். பேரின்பம். பின்னர் திருவாளர்கள்: எஸ். எஸ். மணியம், கே எஸ். லிங்கம், பாலா, பாண்டியன், சிவலிங்கம் சோமசேன, ஜோதி, கந்தையா ஆகியோரும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். தலைவர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

—

### மலை நாட்டுக் கலைமன்றம்

மலை நாட்டு கலைமன்றத்தின் பொதுச் செயலாளர் திரு. பொ. கிருஷ்ணசாமி பின்வருமாறு எழுதுகிறார்:-

மலை நாட்டுத் தமிழ் மக்களின் கல்வி, கலை, கலாச்சார முன்னேற்றத்திற்காக 'மலை நாட்டுக் கலைமன்றம்' என்ற பெயரில் அரசியல் கலப்பற்ற ஒரு மன்றம் அமைக்கப்பட்டிருப்பது. அனைவரும் அறிந்ததே. மலை நாட்டுத் தமிழ் மக்களின் மத்தியிலே இன்று மங்கி வரும் கலைகளுக்குப் புத்துயிரளித்து மலை நாட்டு மக்களை கலாச்சார ரீதியில் முன்னேற்றுவதையே தனது தலையாய பணியாகக் கொண்டுள்ள 'மலை நாட்டுக் கலை மன்றம்', மலைநாட்டுத் தமிழர்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட சிறுகதைத் தொகுப்பொன்றை கூடிய விரைவில் வெளியிடுவதென கடந்த மன்றக் கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இச் சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதோடு, 'தோட்டப்பாடல்' தொகுதியொன்றையும் மன்றம் வெளியிடவிருக்கிறது.

—

### ஆயுர்வேத பரீக்ஷை முடிவுகள்

வட இலங்கை சுதேச வைத்திய சபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியில், சென்ற மார்ச் மாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீக்ஷையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர்களை (தராதர ஒழுங்கின்படி) பின் வருமாறு வெளியிட்டிருக்கிறார்கள்.

விசேஷ வகுப்பு:- (முதல் வருடம்) அ அருமைநாயகம்-(1-ம் பிரிவு)

நாலாம் வருடம்:- (1) செ. வல்லிபுரம்-(2-ம் பிரிவு) (2) இ. சுப்பிரமணியம்- (2-ம் பிரிவு) (3) இ. கந்தையா-(3-ம் பிரிவு) (4) மு. விஞசித்தம்பி-(3-ம் பிரிவு) (5) த. கனகரத்தினம்- (3-ம் பிரிவு)

இரண்டாம் வருடம்:- (1) க. வல்லிபுரம்- (1-ம் பிரிவு) (2) செ. வைத்திலிங்கம்- (2-ம் பிரிவு) (3) மா. கதிரேசு- (2-ம் பிரிவு)

முதல் வருடம்:- (1) ந. பத்மநாதன்- (2-ம் பிரிவு)

—

### சைவ இளைஞர் மன்றம்

தெமட்டக்கொட அரசினர் கலவன் பாடசாலை சைவ இளைஞர் மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அணிமையில் மன்றப் பொறுப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் ஆரம்பமாயது. தலைவர் முன்னுரையில் இப்பாடசாலைச் சரித்திரத்தில் முதல் முறையாக ஒரு சைவ இளைஞர் மன்றத்தை ஆரம்பித்து வைப்பதில் பெருமை கொள்கிறேன் என்று கூறி சங்கத்தின் பிரதான நோக்கங்களை எடுத்துரைத்தார். காரியதரிசியாக செல்வன் நீலகண்டன் தெரிவு செய்யப்பட்டார்: ஆசிரியர்கள் குறிப்புரையில் திருவாளர்கள் வே. சதாசிவம், ஆ. பொன்னுத்துரை, சு. பரமானந்தம் ஆகியோர் பேசினர்.

—

### மாணவர் மன்றம்

ஓட்டமாவடி சிரேஷ்ட பாடசாலையின் அரை வருடப் பூர்த்தி மாணவர் மன்றக் கூட்டம் சென்ற 10-6-59-ல் மன்றத் தலைவர் ஏ.ஸ். எம். இப்ருகிம் தலைமையின் கீழ் தேசிய கீதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வமயம் எஸ். எம். ஏ. மௌலானு "இளைஞனும் எதிர்காலமும்" என்னும் விடயமும், கே. முஸ்தபா "நபிகள் நாயாகம்" என்னும் விடயமும், மற்றும் ஏ. எம். இஸ்மாயில், ரி. செல்வராணி, ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் தலைவரின் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

—

### கேணியடி சனசமூக நிலையம்

கேணியடி சன சமூக நிலையத்தில் சென்ற 13-6-59-ல் சுகாதார விழா நடைபெற்றது. திரு. எம். பத்மனுபன் "சுகாதார சேவை" என்பது பற்றிப் பேசினர். பிறகு "சீர்திருத்தம்" என்ற நாடகம் நடத்தப்பட்டது. நடிகர்கள் ரி. துரைமணி, ஆர். ஆர். யோகேந்திரநாதன், ரி. தம்பித்துரை, என். சண்முகலிங்கம் மற்றும் அருளம்பலம், கணபதிப்பிள்ளை, கே. பொன்னம்பலம் முதலியோர் ஆவர்.

—

### இந்து மாணவர் மன்றம்

வாழ்வுக்கு இன்றியமையாத சமய வாழ்வு குன்றிய காலத்தில், இந்து மதமே பூண்டோடு அழியுந் நிலைமை கி. பி. 6-ம் நூற்றுண்டில் ஏற்பட்டபோது ஞான சம்பந்தப் பெருமான் தோன்றி பொதுவாய்த் தமிழ் மொழிக்கும், சிறப்பாய் சைவத்திற்கும் புத்துயிரளித்தார். பௌத்தமும் சமணமும் தலை தூக்காவண்ணஞ் செய்தவர் சம்பந்தப் பெருமானே"

இவ்வாறு தம்பிலுவில் அரசினர் கனிஷ்ட பாடசாலை இந்து மாணவர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் குரு பூசைத் தினத்தில் முக்கிய பேச்சாளராக இருந்த "கதிரொளி" பத்திரிகாசிரியரும் இந்து சமயவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய திரு. என். தம்பிலிங்கம் குறிப்பிட்டார். இக் குரு பூசைக்குத் திரு. கே. சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

திரு. எஸ். வன்னியசிங்கம் ஆசிரியர், திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆசிரியர் முதலியோர் உபந்நியாசம் செய்தனர்.

மாணவிகள், திருஞானசம்பந்தரது தேவாரங்களைப் பாடினர்கள். காரியதரிசி நன்றியுரை கூறினர்.

—

### அருள் நெறித் திருக் கூட்டம்

மட்டக்களப்பு அருள் நெறித் திருக் கூட்டத்தின் சார்பில் வைகாசி மாதம் 22-ம் திகதி கல்லடி-உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வீதியில் திருவள்ளுவர் தின விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு நீதிபதி திரு. அரசு வால்டன் தலைமை வகித்தார். திருக்குறட் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கு திருமதி அரசு வால்டன் பரிசில்களை வழங்கினர். திருக்குறட் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற கல்லடி-உப்போடைச் சிவானந்த வித்தியாலய மாணவன் செல்வன் வீ. மகாலிங்கம் சிவத்திற்குத் தங்கப் பதக்கமும், திருக்குறள் எழுத்துப் பரீட்சையில் முதலிடம் பெற்ற கல்லடி-உப்போடை இ கி. ச. பெண்கள் பாடசாலை மாணவி செல்வி. பொ அளகம்மாவிற்கு வெள்ளி பட்டும் வழங்கப்பட்டன. ஏனையோர் புத்தகப் பரிசில்கள் பெற்றனர்.

—

### கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் அண்மையில் கூடிப் பல முடிவுகளைச் செய்தது. பதினேழாவது ஆண்டு விழாவை முத்தமிழ் விழாவாக ஆகஸ்ட் மாதம் 1, 2-ஆம் நாள்களில் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. இப்பொழுது அச்சாகும் "முருகு" எனும் பெயர்கொண்ட சங்க வெளியீடு ஆண்டு விழாவன்று வெளியிடப்படும். தமிழிசைப் போட்டியையும் பேச்சுப்போட்டியையும் விரைவில் நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. சங்கத்தின் பட்டிமன்ற அமைப்பு விதிகளையும் ஆட்சிக்குழு அங்கீகரித்தது. சங்க உறுப்பினர்களும், கல்லூரி மாணவர்களும் இலவசமாகப் பட்டிமன்றத்திற் சேரலாம்.

ஏனையோர் உறுப்புரிமைப் பணமாக ஆண்டுக்கு 2 ரூபா செலுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது.

—

### அர்ச் மரியநாயகி பழைய மாணவர் சங்கம்

பம்பலப்பிட்டி அர்ச் மரியாயின் தமிழ் பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த 14-6-59-ல் அர்ச் மரியாயின் தமிழ் பாடசாலையில் சங்கத்தின் உபதலைவர் திரு. எஸ். வீரசாமி தலைமையில் நடைபெற்றது.

அது போது கீழ்க்காணும் முடிவுகள் செய்யப்பட்டன: சொற்பயிற்சி மன்றம் ஆரம்பிப்பது, வாசிகசாலை ஆரம்பிப்பது, இலக்கியம், கலை, அரசியல் சம்பந்தமாக சொற்பொழிவுகள் நிகழ்த்துவது, பெரியார்கள் பிறந்த தினங்களை கொண்டாடுவது, கலை நிகழ்ச்சிகள் நடத்துவது.

### திருக்கேதீச்சரம் மஹா சங்காபிஷேகம்

திருக்கேதீச்சர ஆலய மஹா சங்காபிஷேக விழா 25-6-59 வியாழக்கிழமை மிக விமரிசையாய் நடைபெற்றது.

கேதீச்சர நாதருக்கும் கௌரி அம்பாளுக்கும் அன்று பகல் மஹா சங்காபிஷேகமும் விசேட பூசையும், மாலை தேவார பாராயணமும் சைவப் பிரசங்கங்களும் இரவு சுவாமி அம்பாள் வீதி வலம் வரும் மணவாளக் கோல உற்சவமும் நடைபெற்றன. பகல் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

—

### பொதுக்கூட்டம்

இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வத்துகாமம் ஜில்லாக் கமிட்டி தேர்தல் பொதுக் கூட்டம் சி. எம். எஸ். தமிழ் பாடசாலை மண்டபத்தில் திரு. பி. வி. எஸ். நாயுடு தலைமையில் நடைபெற்றது.

இதன் பின்னர் ஜில்லா கமிட்டி உத்தியோகஸ்தர்களாக கீழ் கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்; ஜில்லாத் தலைவர்:- கே. கோபால் ஆச்சாரியார்; கூட்டுகாரியதரிசிகள்:- ஏ. வி. சுப்பிரமணியம், எஸ். ஆர். துரைச்சாமி; எம். இராமையா.

### கைலாசம் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தமான ஆவணிச் சிராவண பூரணை தினம். பாரத மக்கள் விசேஷமாக விழாவெடுக்கும் ரக்ஷாபந்தன விரத தினமும் அன்றுதான். பல்லாயிரம் அடி உயரத்தில் இருக்கும் குகையுள், பனியாலான தூய வெண்ணிறப் பனிலிங்கத் திருமேனியில் அமரநாதப் பெருமானை வழிபட வேண்டிய நன்னுளும் அன்றேயாம் அதற்கு இன்னும் ஐந்து தினங்களிருந்தன. ஆகவே 24ம் திகதியன்று ஸ்ரீநகரிலிருந்து பஸ்ஸில் புறப்பட்டு 60 மைல்களுக்கப்பால் உள்ள 'பஹல்காம்' என்ற இடத்தை அடைந்தேன். பஹல்காம் 7,500 அடி உயரத்திலுள்ளது. மறுநாள் வரை அங்கு தங்கி மேலே பாத யாத்திரைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தேன். (தொடரும்)


## சங்கானை பட்டின சபை புது நூல் நிலையம்

## விரைவில் தொடங்க

### பொதுமக்கள் உதவி கோரப்படுகிறது

சங்கானைப் பகுதியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் நல்ல நூல் நிலையம் ஒன்று அவசியம் தேவைப்படுகிறது என்றும் அதை சங்கானைப் பட்டின சபையின் பொறுப்பில் தொடங்கி நடத்துவதற்கு பொது மக்கள் முடிந்த வகையில் உதவ வேண்டும் என்றும் பிரஸ்தாப பட்டின சபைத் தலைவர் ஒரு அறிக்கையில் கேட்டிருக்கிறர்.

"இப்படி ஒரு நூல் நிலையத்தை நிறுவி நடத்துவதற்கு தளவாடங்கள், ஏராளமான நூல்கள் சஞ்சிகைகள், வெளிநாட்டுப் பத்திரிகைகள்—வெளியீடுகள், நூல் நிலையப் பொறுப்பாளர் வேண்டும்.

"இவற்றிற்கு முதலில் ரூபா 50,000/- வரை தேவைப்படலாம். அரசாங்கம் அளிக்கும் உதவிப் பணமும் பட்டின சபை வருமானத்திலிருந்து ஒதுக்கக் கூடிய நிதியும் சொற்பமாகையால் பொதுமக்களின் உதவியைக் கொண்டு அல்லாமல் நூல் நிலையத்தை நிறுவுவதென்பது சாத்தியமில்லை.

"இப்போது பட்டின சபைக்குள்ள வாசிகசாலை மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாயில்லை; அங்கே போதிய அளவு நூல்கள், பத்திரிகைகள் சஞ்சிகைகளுமில்லை.

ஆதலால் புதிதாகவொன்றை ஸ்தாபித்து நல்ல முறையில் நடத்துவது தவிர்க்க முடியாததாகும். இதை உணர்ந்து அனைவரும் உதவி செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நூல்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகளாகவோ அல்லது பணமாகவோ தந்து உதவலாம். அனுப்பவேண்டிய விலாசம்: தலைவர், பட்டின சபை, சங்கானை." இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது.

## சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜ[illegible]
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வெற்றி வாரம்

## கிங்ஸ்லி ✿ பிளாஸா ✿ நவா

வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) விஜிதா (மஸ்கேலியா) சரசாவி (அக்கரைப்பற்று) தீவொளி (நுவரெலியா)

நடிகர்கள்:

**எஸ். எஸ். ராஜேந்திரன்**

பாலாஜி, எஸ். வி. ரங்கராவ், டி. ஆர். ராமச்சந்திரன், எம். கிருஷ்ணமூர்த்தி, ராகவன்



நடிகைகள்:

**பண்டரிபாய்,**

மைனாவதி, தேவிகா, சூர்யகலா, லட்சுமி பிரபா, ராதாபாய்

ஆகியோர் நடித்த


# அன்பு எங்கே?

நட்சத்திர நடிகர்கள் ஜொலிக்கும் தீந் தமிழ் திரை விருந்து! சிறந்த நகைச் சுவை காட்சிகள். கண்கவர் 'ராக்கென்ரோல்' நடனம் களிப்பூட்டும் இன்னிசை கீதங்கள்



பின்னணி பாடியவர்கள்:

டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, சுசீலா, லீலா, ஜமுனாராணி, ராதா ஜெயலட்சுமி, பால சரஸ்வதி.



வசனம்: **முரசொலி மாறன்**

டைரக்ஷன்: **யோகானந்த்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, [illegible]-ம் இலக்கத்தில் வசிக்கும் [illegible] சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஜூன் மாதம் 28-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.